REGISTERED No. M. 6165.

626

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
அஜ 2
31 JUL 1956

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

ஆகஸ்டு 1956.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| ஸப்ரு என்னும் பொறுமையின் பெருமை ... ... | 1 |
| கிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது துப்பு துலக்கிய தூயவர் ... ... ... ... ... | 7 |
| நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும் ... ... ... ... ... ... | 11 |
| பிச்சைக்காரன் (M. A. மீரான் மொஹிதீன்) ... | 21 |
| இஸ்லாமிய சரித்திரச் சாரம் (T. F. R. மஆலி ஸாஹிப்-பாகவி) ... ... | 29 |


ல் இஸ்லாம் ஆபீஸ் :
ஹரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

3L
Q7 ma24/N124FI
N56.
187054

# பத்ஹுல் இஸ்லாம்.

| | | | |
|---|---|---|---|
| சந்தா விபரம்: | இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு | | |
| | வருஷ சந்தா | ரூ. | 1–8–0 |
| | தனிப் பிரதி | அணா. | 0–2–0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | | ரூ. | 2–0–0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

---

மானேஜர்,

பத்ஹுல் இஸ்லாம்,

20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதரூஸ் 5·

---


## மாயமாய் மறைந்த மங்கை

இது ஓர் அருமையான துப்பறியும் நாவல்; திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்துள்ளது. இதில் ஒரு பெரிய பணக்காரன் விரோதிகளுக்குப் பயந்து தனக்கு ஆபத்து ஏதும் வராமலிருக்க, பெயர் பெற்ற துப்பறியும் ஷம்ஸின் உதவியை நாட, ஷம்ஸ், ஷெ வேலியின் நிமித்தம் அனுப்பிய ஏஜெண்ட் கொல்லுண்டு, அந்த பணக்காரரும் காணமற் போய் விடுகிறார். இதை ஷம்ஸ் விசாரிக்க செல்ல, அங்கு ஒரு மாசற்ற மங்கை மாயமாய் மறைந்த மர்மத்தையும், ஷம்ஸ் தனது அஸிஸ்டென் சோடேவின் உதவியினல் சிறிதும் அஞ்சாமல் கொலைக் கூட்டத்தினடுவே துணிந்து சென்று மர்மங்களைக் கண்டு பிடித்து விளக்குகின்றார். இதைப் படிக்க ஆரம்பஞ் செய்வோர் கதை முழுவதையும் முடிக்காமல் புத்தகத்தை கீழ் வைக்க மாட்டார் என்பதில் ஐயமில்லை.

இதன் விலை அணா. 8

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# பத்ஹுல் இஸ்லாம்

ஆகஸ்டு—1956.

## ஸப்ரு என்னும் பொறுமையின் பெருமை.

உலகம் சுகமும் துக்கமும் நிறைந்த ஸ்தலம். சந்தோஷமும் சஞ்சலமும் உலகில், மாந்தர் கோடிகளுக்கு கலந்தே வந்து கொண்டிருக்கின்றன. எவரும் துக்கம் அனுபவிக்காமல் இருப்பதில்லை; எவரும் சுகம் அனுபவிக்காமல் இருப்பதில்லை.

"இன்ன மஅல் உஸ்ரி—யுஸ்ரா" என்பது இறைவனின் திருக்கட்டளை. "கஷ்டத்தை யடுத்து சுகம் உண்டு" என்பது இதன் கருத்து.

இரவு காலம் இருள் உள்ளது. சௌகரியக் குறைவானது இரவு நேரம் என்பது வெளிப்படை. பகலில் நாம் சர்வசாதாரணமாய் செய்யும் காரியத்தை இரவில் செய்ய முடிவதில்லை. ஏனெனின், பகலில் சூரிய வெளிச்சம் உண்டு; எங்கும் பிரகாசமுண்டு. இரவில் இருள் சூழ்ந்து கொள்வதுடன், பல அசௌகர்யம் உண்டு.

இரவு எப்போதும் இரவாகவே இருந்து விடுகிறதா? இருள் சூழ்ந்த இரவுக்கும் ஒரு முடிவு காலமுண்டு. அந்த இருட்டை விரட்டி அடிப்பதற்கு, காலைச்சூரியன் வெகுதுரிதத்திலேயே உதய

மாய் விடுகிறது. பிரகாசச் சூரியன் உதயமானதும் இரவுக் காரிருள் ஓட்டம் பிடிக்கிறது.

சத்தியம் வந்ததும் அசத்தியம் ஓடிப்போவதுபோல், பகல் போது வந்ததும் இராப்போது மறைந்துவிடுகிறது. உண்மை வெளிப் பட்டதும் பொய்மறைந்து விடுவதுபோல், சந்தோஷம் வந்ததும் சஞ்சலம் மறைந்துவிடுகிறது.

மனித வாழ்க்கையை சஞ்சலம் என்னும் பனிப்படலம் மூடிக் கொள்வதுஇயற்கை. மூடுபனியால் போக்குவரத்துப்பாதை மறைக்கப் படுவதுபோல், வாழ்க்கையின் நலனும் இடரும் தெரியாது போகிறது. அப்படிப்பட்ட சமயத்தில் நாம் சூரியப் பிரகாசத்தை எதிர்பார்க் கிறோம். எல்லாம் வல்ல இறைவன், சூரியன் என்னும் வெண்சுடர் பிளிம்பை அனுப்பிப் பனிப்படலத்தை விரட்டுகின்றான். மாந்தர் கடுங்குளிர் நீங்கி சூரியக் கிரணத்தினாலான இன்பத்தையும் ஆரோக் கியத்தையும் பெறுகிறார்கள்.

இதனால் நாம் என்ன அறிகிறோம், எல்லாம் வல்ல இறை வனால் சிருஷ்டிக்கப்படும் இயற்கை கூட, என்றும் எப்போதும் ஒரே மாதிரியாக இருந்து விடுவதில்லை. உதாரணமாக, இரவுபோய் பகல் வருகிறது. பிறகு பகல்போய் இரவு வருகிறது. பனிப்படலம் நீங்கி சூரியக்கிரணம் வீசுகிறது. வரட்சிபோய் வசந்தம் வருகிறது. கோடைகாலம் போய் மாரிகாலம் வருகிறது. இலையுதிர்காலம் போய் மரஞ்செடி புஷ்பிக்கும் வசந்தகாலம் வருகிறது.

இதேமாதிரி, பொதுவாக மனிதர்களுடைய வாழ்விலும், குறிப் பாக முஸ்லிம்களுடைய வாழ்க்கையிலும், சுகமும் துக்கமும் வாழ் வும் தாழ்வும் சந்தோஷமும் சஞ்சலமும் மாறிமாறி வந்து கொண் டிருக்கின்றன. இது இறைவனின் கற்பனையும் கட்டளையுமாகிய இயற்கையாகும். இந்த இயற்கை மாறுதலைக் கண்டு பக்தகோடி களாகிய மூமின் முஸ்லிம்கள் அஞ்சிவிடமாட்டார்கள். அவர்கட்கு வாழ்க்கையில் சுகம் வருவதும் துக்கம் வருவதும் எங்ஙன மிருக்கு மெனின், இரவு வருவதும் அதுபோய் பிறகு பகல் வருவதும் போலவே இருக்கும்.

இதைத்தான் அல்லாஹுதஆலா, குர்ஆன் ஷரீபில் "இன்ன மஅல் உஸ்ரி யுஸ்ரா"—(கஷ்டத்துக்குப் பிறகு சுகம் தொடர்ந்து வரும்) என்று திருவுளமாயிருக்கின்றான்.

18754

திருக் குர்ஆனில் இன்னோரிடத்தில் "ஏ இறைவனே, நீ பகலி லிருந்து இரவை வெளிப்படுத்திவைக்கிறாய்; இரவிலிருந்து பகலை உண்டாக்கி வைக்கிறாய். இறந்துபோன (மையித்)திலிருந்து உயிருள்ள ஜீவனை வெளிப்படுத்திவைக்கிறாய். உயிருள்ளவற்றிலிருந்து அதை மரிக்கச்செய்து—பிரேதங்களை வெளிப்படுத்தி வைக்கிறாய்" என்ற தத்துவார்த்த மொழியும் காணப்படுகிறது.

இதெல்லாமே அல்லாஹ்வுடைய குத்ரத்தையும் அவனுடைய சிருஷ்டிப்புத் தத்துவத்தையும் இனிது விளக்குகிறது. மரித்ததிலிருந்து ஜீவனுள்ளது வெளிப்படுவது என்பது, மற்றொரு கருத்தையும் குறிப்பிடுகிறது. அதாவது காய்ந்து வறண்டுபோன பூமியின் மீது வானத்திலிருந்து மழையைப் பொழிய வைத்து, அக்காய்ந்த பூமியை ஈரமுள்ளதாக்கி அதாவது செத்துப்போனதை உயிருள்ளதாக்கி, அதிலிருந்து மரஞ்செடி கொடிகளையும், நெல் கோதுமை சோளம் முதலிய தானியங்களையும் உற்பத்தி செய்து, செல்வபாக்கியங்களை ஆண்டவன் வெளிப்படுத்தி வைக்கிறான். அதே போல்தான், செழிப்பான நீர்வளம் நிலவளமுள்ள பூமிப் பிரதேசத்தில் மழையின்மை என்னும் பஞ்சகாலத்தை உண்டாக்கி, வறண்டுபோகச் செய்து மரித்த புஞ்சை பூமியாகவும் ஆக்கிவைக்கின்றான்.

காலத்தின் மாறுதல்களுக்கு மரஞ் செடி கொடிகளும், மலை கடல் திடல் முதலியவைகளும் எங்ஙனம் பணியாற்றி வருகின்றன என்பதை, அறிவுக்கண் கொண்டு பார்ப்போமாயின், பல தத்துவங்களுடன் அறியலாம். பொறுமை என்பதைப் பணிந்து ஏற்பதென்பது இயற்கை சிருஷ்டியனைத்திலும் இருக்கிறது.

மனிதன் ஒருவன் தான், பல சமயங்களில் பொறுமை இழந்து போய் விடுகிறான். மனிதனுக்கு கஷ்டம் வந்தால் அது ஏன் வந்தது என்று ஆய்ந்தோர்ந்து பார்க்கத் துணிவதில்லை. இயற்கை மீது குறை கூறத்தொடங்கி விடுகிறான். சில மாந்தர்கள் இறைவனையே குறை கூறவும் தொடங்கிவிடுகிறார்கள்.

ஒருவனுக்கு கஷ்டம் கஷ்டம் வருகிறதென்றால், அதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒரு தனவந்தன் சர்வ ஜாக்கிரதையாக இருந்தால், அவன் தன் சொத்து செல்வம் வியாபாரங்களை பாதுகாத்து நிர்வகித்து மேன்மேலும் நல்ல ஸ்திதியடைகிறான். ஒரு தனவந்தன்

அஜாக்கிரதையினால் பணப் பெட்டியை திறந்து போட்டு விட்டதால், பணம் திருடுபோய் விடுகிறது. அப்புறம் வந்து அங்கலாய்க்கிறான். கடவுள் தனக்கு கஷ்டத்தை கொடுத்து விட்டதாகவும், கடவுளுக்கு கருணையில்லை யென்றும் குறைசொல்லிப் புலம்புகிறான். அவனு டைய பொருள் நஷ்டத்துக்கு அவனே காரணமில்லாமல் வேறு யார்?

இப்படிப்பட்ட சமயங்களில் பொறுமையும், யோசித்துப் பார்க்கும் தன்மையும் வேண்டும். கடவுளுடைய இயற்கை தரும நியதியில் உறுதியான நம்பிக்கை என்னும் ஈமானும் யகீனும் வேண்டும்.

பொதுவாக இறைவனுடைய குத்றத்தை நினைத்துப் பார்க்க வேண்டும். எல்லாம் வல்ல அல்லாஹுத் தஆலா, கடலை திடலாகவும், திடலை கடலாகவும், மலையை மடுவாகவும், மடுவை மலையாகவும் ஆக்க அவனால் முடியும். ஜனவாச முள்ள ஊர்ப்பிரதேசத்தை பாழாய்ப் போன பாலைவனமாக்கி விடவும், பாழ்ப்பட்டுக் கிடக்கும் பூமி பிரதேசத்தில் சகல நல்வளத்தை உண்டாக்கி அதில் ஜீவ ஜந்துக்களும் மனித குடி ஜனங்களும் வந்து வாழும்படிச் செய்து மாபெரும் நகரமாக்கி விடவும் ஆண்டவனால் முடியும்.

இதெல்லாம் எதை விளக்குகிறது? மனிதருடைய ஜீவியத்தில் சுகமும் துக்கமும், வாழ்வும் தாழ்வும் மாறி மாறி வருவது போலவே தான், இந்த பூலோகத்து ஒவ்வொரு சிருஷ்டிப்புத் தன்மையிலும் உயர்வும் தாழ்வும், செழிப்பும் அழிவும், புரட்சியும் அமைதியும் உண்டாக்கச் செய்ய வல்லவனாக இருக்கிறான் எல்லாம் வல்ல அல்லாஹுத் தஆலா!

வானத்தின் கோள மாறுபாடுக ளென்னும் இயற்கை நிகழ்ச்சி களிலும், சந்திர சூரிய நட்சத்திர கிரகச் சுழல்களிலும், பூமியின் வாழ்வு தாழ்வுகளிலும், மனித சமூகத்தின் சந்தோஷம் துக்கம் களிலும், மற்றும் எல்லாவித ஏற்றத் தாழ்வுகளிலும், அறிவுடைய மக்களுக்கு, விவேகமும் புத்திமதியும் அடங்கி யிருக்கிற தென்று அல்லாஹுத் தஆலா திருவுளமா யிருக்கின்றான்.

இத்தியாதி மாறுபாடுகளினால், விவேகமுள்ள மாந்தர்-மனம் சோர்ந்தோ மனம் பேதமுற்றோ போக மாட்டார்க ளென்பது

திண்ணம். அதாவது திடசித்தமும், உறுதியான ஈமானும், மத பக்தியும், தெய்வத்திடம் திடமான யகீனும் உடைய மூமின்கள், ஒரு போதும் மனம் பேத மடைந்து விடமாட்டார்கள். அதாவது சுகம் வந்த போது துள்ளி குதித்து அட்டூழியங்கள் புரிய மாட்டார்கள். கஷ்டங்கள் வந்த போது அழுது புலம்பிக் கொண்டு அல்லலுற்று நலிந்து போக மாட்டார்கள்.

"வஇதா அஸாபத் ஹும் முஸீபத்துன் காலூ இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்" அதாவது மூமினான நல்லோர்க்கு துன்பம் வந்துறுத்துங்கால் அவர்கள் 'நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காக உயிர் வாழ்பவர்களாக இருக்கின்றோம்; இறுதியில் மரித்து அவனிடமே மீண்டு செல்பவர்களாய் இருக்கின்றோம்' என்று கூறுவார்கள். இது திருக் குர்ஆன் நமக்கு கற்பிக்கும் மகாப்பெரும் தத்துவமாகும்.

மூமினானவர்கள், ஸப்ரு என்னும் பொறுமைக் குணத்தை ஆத்ம பூஷணமாகக் கொண்டு, அமைதியான நல்வாழ்வு வருவார்கள். துக்கம் வந்தால் துடி துடித்துப் போக மாட்டார்கள். சுகவாழ்வு வந்து விட்டால், துள்ளிக் குதித்து கெட்டுப் போக மாட்டார்கள்.

இப்படிப்பட்ட ஸப்ருடைய பொறுமை சாலிகளுக்கு அல்லாஹ்வுடைய ரஹ்மத்தும் கிருபா கடாக்ஷமும் உண்டாகிக் கொண்டிருக்கும். அவர்களுடைய வாழ்வில் சுகபோகம் இல்லா விடினும், மனதில் அமைதியும் பரம ஆனந்தமும் இருக்கும்.

"இன்னல்லாஹ மஅஸ் ஸாபிரீன்"—பொறுமையாளர்களுக்கு அல்லாஹு தஆலா துணையாக இருக்கின்றான். ஸப்ருடைய பெருமை மகாப் பெரியதாகும்.

# அன்வாருல் குர்ஆன்

## என்னும் திருமறை பிரகாசம்.

1-வது ஒளி

## அம்மயத் ஜுஸுவின் தர்ஜுமா.

இந்த புஸ்தகத்தில் அம்மயத் ஜுஸுவில் உள்ள எல்லா ஸூருக்களும் தர்ஜுமா செய்யப்பட்டு இருக்கின்றன. ஒவ்வொரு ஆயத்தையும் முதலில் அரபியில் போட்டோ பிளாக்கைக் கொண்டு அச்சிடப்பட்டு, அதை யடுத்து அதற்குத் தமிழில் உச்சரிப்பு காயிதாவுடன் போடப்பட்டு, அதனை யடுத்து அந்த ஆயத்தின் பொருளை சுத்தத் தமிழில் போடப்பட்டு இருக்கின்றன. இந்த புத்தகம் அம்மயத் ஜுஸுவிலுள்ள ஒவ்வொரு ஆயத்திற்கும் பொருளை அறிந்து கொள்ள உதவுவதுடன் அரபியே தெரியாதவர்கள் அம்மயத் ஜுஸுவிலுள்ள எந்த ஸூருவையும் ஓததெரிந்து கொள்ள உதவும். விலை அணா. 12

2-வது ஒளி

## ஸூறத்து யாஸீன் தர்ஜுமா.

இந்த புஸ்தகத்தில் ஸூறத்து யாஸீனில் உள்ள ஒவ்வொரு ஆயத்தையும் 1-வது ஒளியைப் போலவே தமிழ் உச்சரிப்புடன் தர்ஜுமா செய்யப்பட்டிருக்கின்றது.

விலை அணா. 8

3-வது ஒளி

## ஸூறத்து தபாறக் தர்ஜுமா.

இதில் தபாரக் ஸூருவில் உள்ள ஆயத்துகளை ஆயத்து ஆயத்தாக போட்டோ பிளாக்கில் போடப்பட்டு, அவைகளுக்குக் கீழ் அந்த ஆயத்துகளுக்கு உச்சரிப்பும் தர்ஜுமாவும் தமிழில் போடப்பட்டுள்ளது. விலை அணா. 4

ஷை மூன்று ஒளிகளும் சேர்ந்தது கலிகோ பைண்டு விலை ரூ. 1—8—0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ், 5.

# சிறைப் பறவை சிப்கத்துல்லா

அல்லது

# துப்பு துலக்கிய தூயவர்

## முதல் அத்தியாயத் தொடர்.

மற்ற மனிதர்களால் எழுத முடியும் எழுதவும் செய்தார்கள். புகைப்படத்தை அதற்குரிய இடத்தில் வைத்தவண்ணம் சிந்தனை யுலகில் அவர் சஞ்சரிக்கலானார். மனத்துக்கிசைந்த மங்கை மரியம் குறித்து கடிதத்தில் கரீமுல்லா கான் பிரஸ்தாபிப்பதே யில்லை. மரியமும் வெகுகாலமாகக் கடிதம் எழுதவில்லை. கரீமுல்லாவின் கடி தங்களில் "மரியம் சௌக்கியம்" "நீர் விசாரித்தமைக்காக உமக்கு மரியம் நன்றி செலுத்திக் கொள்கிறாள்" என்பது போன்ற சுருக்க மான செய்திகளே காணப்பட்டன.

மரியமை கண்ணுங் கருத்துமாக வளர்த்து வந்தார் கரீமுல்லா. 'சிறை கறை' படிந்த மனிதனை மரியம் மணந்து கொள்ளலாகா தென்பதில் அவர் உறுதி கொண்டிருந்தார். மகள் மரியம்மீது கரீ முல்லா காட்டிய பிரீதி பிரமிப்பூட்டுவதாக விருந்தது. அவளது மகிழ்ச்சிகரமான மணவாழ்க்கையும் வளமை மிகு வருங்காலமும் பற்றி அவர் கவலை கொண்டிருந்தார். சிப்கத்துல்லாவை சிரேஷ்ட குமாரன் போன்று நேசித்தபோதிலும் 'சிறை கறை' பிடித்தவராக இருந்தமையால் அவருக்கு மகளை மணம் முடித்து வைக்க மன மிசைய வில்லை. துரதிர்ஷ்ட சம்பவத்தில் சம்பந்தப்பட்டு சிறை யில் 'கம்பி' எண்ண வேண்டிய நிலை ஏற்பட்டிராவிடில், சிப்கத் துல்லாவுக்கும் மரியமுக்கும் மணம் முடித்து வைத்து மனம் மகிழ்ந்திருப்பார் கரீமுல்லா. மரியமும் சிப்கத்துல்லாவை நேசித் தாள். இருதரப்பிலும் பரஸ்பரம் பாசமும் நேசமும் இருந்த போதிலும் பாழும் 'சிறைகறை' தாம்பத்ய உறவுக்குத் தடையாக அமைந்தது.

இவ்வாறு சிறையில் சிந்தனைச் சுழலில் சிக்கி சிப்கத்துல்லா தவித்துக் கொண்டிருந்தபோது, அவருக்கு தேநீர் கொண்டு வரப் பட்டது; இறுதியாக, கதவு பூட்டப் பெற்றது. எங்கும் அமைதி நிலவியது; மீண்டும் கிளம்பிய சிந்தனைச் சுழலில் சிப்கத்துல்லா சிக்கிக்கொண்டார்.

அவரை வாலிப காதர்கான் காட்டிக் கொடுக்கவேண்டிய காரணம் என்ன? ஒரே ஒரு தடவைதான் அவனை அவர் பார்த்திருக்கிறார்; அவர்கள் ஒருபோதும் பழகியதில்லை. கள்ள கோட்டு தயாரிக்கும் அக்கயவனை அவர் தற்செயலாகத்தான் பார்க்க நேர்ந்தது. வாலிப காதர்கான் காரிய சாதனையில் 'கண்' உள்ளவன். சாதாரணமாக, சதிசெய்வோர் சந்திக்கும் சந்தைகளில் இவனைக்காண முடியாது. தேநீர்க்கடைகளில் தேநீர் அருந்தி, அரிய சாதனைகள் குறித்து அளந்து கொட்டும் அரைகுறை அதிர்ஷ்டசாலிகளைப் போலிராமல், சதி செயல்களுக்குத் திட்டமிடுவதிலும் திறமையாக நிறைவேற்றுவதிலும் 'மர்ம மனிதன்' ஆகவே அவன் இருந்து வந்தான்.

சாவி போட்டு பூட்டுத் திறக்கப்படும் ஓசையைக் கேட்டு ஓரமாக ஒதுங்கி நின்றார் சிப்கத்துல்லா. அன்று வெள்ளிக்கிழமை என்பதையும் மார்க்க உபதேசம் செய்யும் பொருட்டு மார்க்கப் பெரியார் வரும் வேளை என்பதையும் அவர் மறந்து விட்டிருந்தார்.

"சிப்கத்துல்லா! சிறிது சிந்தித்துப்பார்" என்ற முகவுரையுடன் முல்லா சாஹிப் தொடங்கினர். சிப்கத்துல்லா உட்கார்ந்தார்; அவரது படுக்கையின்மீது முல்லா சாஹிப் அமர்ந்தார்.

சிப்கத்துல்லாவின் சிந்தனை அறுபட்ட ஸ்தலத்திலிருந்து அவர் பேச்சு கிளப்பியது விநோதமாக விருந்தது.

"வாலிப காதர்கானைப் பற்றி உனது மனம் தெளிவு பெறச் செய்யவேண்டு மென விரும்புகிறேன். உண்மையானதாக விருந்தாலும் அல்லது கற்பனையானதாக விருந்தாலும் குறைகள் குறித்து சிந்தித்துக்கொண்டிருப்பது சிறந்ததல்ல. உனது சிறைவாச காலத்தின் கடைசிக் கட்டத்தை நீ சமீபித்துக் கொண்டிருப்பதால் உனது வெறுப்பு விரோதமாக பரிணமிக்கும் சந்தர்ப்பம் சமீபத்தில் கிடைக்கலாம். ஆனல், உன்னை நான் இங்கு மீண்டும் காண்பதற்கு விரும்பவில்லை."

சிப்கத்துல்லா சிரித்தார். "நான் இங்கு திரும்பவும் வருவதை நீங்கள் விரும்ப வில்லையா? வாலிப காதர்கானைப் பொறுத்தவரை, அவனைப் பற்றி எனக்கு எள்ளளவும் தெரியாது. அவனைக் குறித்து சிந்தித்தும் கேட்டும் இருக்கிறேனே யன்றி உண்மையில் எனக்கு எதுவும் தெரியாது."

முல்லா சாஹிப் முன்யோசனையுடன் சொன்னர்: "நான் சிறிது கேள்விப்பட்டிருக்கிறேன். கள்ள கோட்டு தயாரிக்கும் பெரும் பேர்வழி எனச் சொல்கிருர்கள். அது வாஸ்தவமா? உண்மையை உரைக்குமிடத்து, காட்டில் கள்ள கோட்டுக்கள் வெள்ளம் போல

பெருகி விட்டிருப்பது எனக்குத் தெரியும்; அவற்றைப் பழக்கத்துக்கு விடும் பேர் வழியைக் கையுங்களவுமாகப் போலீஸாரால் பிடிக்க முடியவில்லை என்பதும் தெரியும். கள்ள நோட்டுகள் அச்சிடுபவன் வாலிப காதர்கான் தானே?

சிப்கத்துல்லா பதிலளிக்கவில்லை. சிறிது வருத்தத்தோடு முல்லா சாஹிப் புன்முறுவல் செய்தார். பின்னர், நகைச்சுவை ததும்ப, நயமாக அவர் வினவினர். "இரகசியத்தை அம்பலப் படுத்தக் கூடாது என்பது மார்க்கத்தின் மற்றொரு கட்டளை யல்லவா? நான் அறிவிலியாகப் பேசி விட்டேனே என அஞ்சுகிறேன். உனது சிறைவாச காலம் எப்போது முடிவு பெறுகிறது ?"

"ஆறு மாதங்களில் அது முடிவடையும். அதற்காக நான் வருத்தப்படவு மாட்டேன்." என்றார் சிப்கத்துல்லா.

"நீ என்ன செய்யப் போகிறாய்? உன்னிடம் பணம் இருக்கிறதா ?"

"ஆம், எனக்கு ஆண்டு தோறும் ஆறாயிரம் ரூபாய் கிடைக்கிறது. சில காரணங்களுக்காக, விசாரணையின் போது அந்த உண்மை வெளியாகவில்லை. எனது கஷ்டம் காசு சம்பந்தப்பட்டதல்ல. தூர தேசங்களுக்குப் பிரயாணம் செய்வேன். நிச்சயமாக, கடந்த காலத்தைவிட மிக கண்ணியமாக வாழ்க்கை நடத்துவேன்."

"எனவே உனது பெயரை மாற்றிக் கொள்ளப் போவதில்லை என்பது நிச்சயமாகிறது. ஆண்டு தோறும் கிடைக்கும் ஆறாயிரம் ரூபாயைக் கொண்டு, நீ இங்கு மீண்டும் வரும் நிலை, நிர்ப்பந்தம் ஏற்படாது என்றே எண்ணுகிறேன்."

திடீரென ஞாபகம் வரவே, சட்டைப் பையில் கைவிட்டுக் கடிதமொன்று எடுத்து, "சிறை உதவி அதிகாரி இதனை என்னிடம் கொடுத்தார்; எனக்கு மறந்தே போய் விட்டது. அது இன்று காலை கிடைத்தது" என்று முல்லா சாஹிப் தெரிவித்தார்.

கைதிகளுக்கு வரும் கடிதங்களைப் போல இந்த கடிதமும் பிரிக்கப்பட்டிருந்தது. அசட்டையாக அந்த கவரை நோக்கிய போது, எதிர்பார்த்தபடி அது அட்வகேட்டிட மிருந்து வந்ததல்ல என்பதும் கரீமுல்லாவிட மிருந்து வந்துள்ள கடிதம் என்பதையும் சிப்கத்துல்லா உணர்ந்து கொண்டார். மார்க்கோபதேசி மறைந்து கதவு தாளிடப் பெறும் வரை காத்திருந்து பின்னர், ஆறு மாதங்களுக்குப் பிறகு கரீமுல்லாவிட மிருந்து வந்துள்ள அந்த கடிதத்தை உறையினின்று எடுத்து வாசிக்கலானர். அதிலே வரைந்திருந்த வார்த்தைகள் வருமாறு :

'அன்புள்ள சிப்கத்துல்லாவுக்கு, உமக்கு நான் கூறப்போகும் செய்தியால் நீர் நிலை தடுமாறிவிட மாட்டீர் என்று எண்ணுகிறேன். காப்டன் காதிரியை மரியம் மணந்து கொள்ள விருக்கிருள்; நீர் பெரிய மனது பண்ணி அவளுக்கு நல்லாசி கூறுவீர் என்பது எனக்குத் தெரியும். அவளது மணவாளனுகை விருப்பவர் மிக நல்லவர்; அவளைச் சந்தோஷமாக அவர் வைத்திருப்பார்.'

கடிதம் கைநழுவிக் கீழே விழுந்ததையும் கவனியாமல் கால் மணி நேரம் வரை நிலவறையின் குறுக்கும் நெடுக்குமாக நடந்தார். மரியமுக்கு மணம் நிகழப் போகிறது! காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போகப் போகிருன்! அவரது முகம் விசார மடைந்தது; கண்கள் இருளடைந்தன. நடுங்கும் கையில் ஒரு குவளை த்ண்ணீர் வார்த்து மேற்கு நோக்கிய ஜன்னல் கிராதியின் பக்கமாகக் குவளையை உயர்த்தி பெருமூச்சுடன் கீழ் கண்டவாறு கூறி தண்ணீரை ஒரே மூச்சில் குடித்தார்.

"மரியமுக்கு மங்கள முண்டாவதாக!" (தொடரும்.)


வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

திருக் குர்ஆனின் தமிழ் தப்ஸீர்

# தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

(நான்காம் பாகம்)

ஸூரத்துல் இஸ்ராஉ முதல் ஸூரத்து நூர் முடிய 8-ஸூராக்களின் தப்ஸீர் நான்காம் பாகமாக வெளிவந்திருக்கிறது. இது ராயல் 8 பேஜ் சைஸில் 868 பக்கங்கள் கொண்டது. கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டது. விலை ரூ. 10

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்.

## அத்தியாயம் 4.

**வா**ழ்வதற்குரிய வழி வகுத்துத் தந்துள்ள வள்ளல் நபி (ஸல்) வாழ்க்கை வரலாறு, அவர்கள் மீது சுமத்தப்படும் அபாண்ட பழிகள், அவற்றுக்கான பதில்கள் கொண்டதாக இராவிடில் பூர்த்தியானதாகாது என்பது எமது அபிப்பிராயம். ஆதலால், அண்ணல் நபி அஹ்மது (ஸல்) மீது சுமத்தப்பெறும் அர்த்தமற்ற, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சிறிது விவரித்து, அவற்றை விட்டு அவர்கள் எவ்வாறு தூய்மையானவர்கள் என்பதை எடுத்தியம்புவோம்.

முஹம்மது (ஸல்) மீது முஷ்ரிக்குகள் சுமத்தும் குற்றச்சாட்டுகளை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். அவையாவன :—

1. பொய் பேசுபவர்; பேராசை கொண்டவர்.

2. மதத்தைப் பரப்புவதில் வாளாயுதத்தின் வலிமையைப் பயன்படுத்தியவர்.

3. காம விகார உணர்ச்சிகளைத் தூண்டும் இழிவான வகையில் சுவனலோகத்தை வர்ணித்தவர்.

4. பலதார மணத்தைச் சட்டபூர்வமானதாக்கியதன் மூலம் வெறுக்கத்தக்க காமாந்தகார உணர்ச்சிகளுக்குத் தூபமிட்டவர்.

இக்குற்றச்சாட்டுகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக எடுத்து ஆராய்வோம்.

### 1-வது குற்றச்சாட்டு

பெருமானர் (ஸல்) பேராசையை விட்டும் தூய்மையான பெருந் தன்மை வாய்ந்த பெரியார் என்பதை அவர்களது வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சமும் பளிங்குபோல பறைசாற்றுகிறது. இவ்வையத்தில் இஸ்லாத்தை நிலைநிறுத்துவதில் தமது ஜீவிய காலத்திலேயே வெற்றிகண்டு அதிகார வரம்பெதுவுமற்ற அரசியல் ஆதிக்கம் செலுத்திய காலத்தும், பதவியைக் கண்டு பவிசு கொள்ளாமலும் சுயநல காரியங்களுக்கு அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யாமலும் இறுதிவரை எளிய, தூய வாழ்வு நடத்தி, ஏழைகளின் தோழராக இருந்ததும் அவர்களது உன்னத குண விசேடத்தைக் குவலயத்தோர்க்கு எடுத்துரைக்கின்றதன்றோ?

அதிகாரம் பெறுவதிலும் பிரயோகிப்பதிலும் மூஸா (அலை) யின் முன்மாதிரியைத்தான் முஹம்மது (ஸல்) பின்பற்றினுர்கள். தலைவர் பொறுப்பேற்று சட்டமியற்றும் அதிகாரத்தையும் கைக் கொண்டதாலல்லவா எகிப்திலிருந்து பனீ இஸ்ராயீல்களை மூஸா (அலை) அவர்களால் மீட்க முடிந்தது. பனீ இஸ்ராயீல்களின் மீட்சியைச் சாக்காக வைத்துக்கொண்டு தலைவர் பதவியை மேற்கொண்டு நீதி வழங்கும் நியாயாதிபதி பொறுப்பேற்றுக் கொண்டதாக அந்நபி மீது எவரும் பழி சுமத்தவில்லை; பழி சுமத்தவும் முடியாது. ஏனெனில், அத்தகைய அதிகார மில்லாவிடில், அவர்களுக்கு அல்லாஹ் ஆக்ஞாபித்த கட்டளைகளை-கடமைகளை-அவர்களால் நிறைவேற்றியிருக்க முடியாது. பனீ இஸ்ராயீல்களைப் பொறுத்த வரை பொருத்தமான இவ்விதி அரேபியர்களுக்கும் பொருந்தும். கோத்திரங்களாகப் பிரிந்து கொலை பாதகச் செயல்களி லீடுபட்ட கொடிய பாவிகளை-பிரிந்து பிணக்கு காரணமாகப் பிளவு பட்டிருந்த பித்தர்களை-ஒற்றுமைப்படுத்தி ஒத்துழைப்பின் மேன்மையை எடுத்துரைத்து ஒப்புயர்வற்ற தீனுல் இஸ்லாத்தை அவர்களிடையே நிலைநிறுத்துவதற்கு தலைமைப் பதவியையும் நியாய பரிபாலன பொறுப்பையும் ஏற்பதைத்தவிர அண்ணல் அஹ்மது நபி (ஸல்) அவர்களுக்கு வேறு வழியில்லாமற் போயிற்று. சுற்றுப்புறம், சூழ்நிலை ஆகியவற்றை நோக்கும்பொழுது, பெருமானுர் (ஸல்) பேராசை பிடித்தவர் எனக்கூறுவது பொருத்தமற்றது, ஆதாரமற்றது என்பது எளிதில் விளங்கும்.

நபியென நவின்றதாக நபிகள் நாயகம் (ஸல்) மீது குற்றம் சுமத்தப்படுகிறது. விரும்பத்தகாத விக்கிரக ஆராதனையை ஒழித்துக்கட்டி தரணியில் தவ்ஹீது (இறைவனின் ஏகத்துவம்) தழைத்தோங்கச் செய்யும் தனிப்பொறுப்பு அல்லாஹ்வின் அனுமதிக்கும் அங்கீகாரத்துக்கும் உரியது என்பது மறுக்க முடியாத மறைக்க இயலாத உண்மை.

அரேபியாவில் தவ்ஹீதை நிலைநிறுத்தி விக்கிரக ஆராதனையை ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) ஒழித்துக்கட்டி விட்டார்கள்; ஆயிரத்து நானூறு ஆண்டுகளாகியும் கூட அந்நாட்டில் விக்கிரக வணக்கம் வேறு எந்த உருவிலும் மீண்டும் தலைகாட்ட வில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கிறிஸ்தவர்களிடையே விக்கிரக வணக்கம் குடிகொண்டதும் தலைமைத்தானம் வகித்த கோஷ்டி, தானே ஏற்படுத்திக்கொண்ட விக்கிரகங்களை உடைத்தெறிவதில் மும்முரமாக முனைந்த விக்கிரக உடைப்புக்கோஷ்டியை மதவைரி என ஆச்சரியத்துடன் பழி சுமத்தியதைப் பார்க்கும்பொழுது உண்மையில் உம்மியும் உத்தமருமான முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வின் அனுக்கிரகம் இருந்ததென்பது விளங்குகிறது.

பெருமானார் (ஸல்) அவர்களின் போதனைகள்—விக்கிரக வணக்கம் கூடாதென வலியுறுத்தும் கட்டளைகள் தவிர—எங்கெங்கு இஸ்லாம் பரவியதோ அங்கங்கெல்லாம் ஒழுக்க நெறியின் ஒப்பற்ற தன்மையை நிலைநிறுத்தின. பாருலகினரிடையே நிலவவேண்டிய பரஸ்பர உறவை ஒழுங்குபடுத்தி விழுப்பம் தருவதும் உயிரினும் ஓம்பப்படுவதுமான ஒழுக்கத்தை இஸ்லாம் இவ்வையத்தில் நிலைநிறுத்தியதென்பதை இஸ்லாத்தின் கொடிய விரோதிகள்கூட ஒப்புக்கொள்கின்றனர்.

அஞ்ஞானத்தில் அமிழ்ந்திருந்த அரேபியர்களை மெஞ்ஞானத்தின் மேன்மையைப் போதிக்கும் மேதாவிகளாக—விக்கிரஹ ஆராதனையிலும் விரும்பத்தகாத செயல்களிலும் ஈடுபட்டிருந்த ஈன மக்களை தவ்ஹீதின் தனிச் சிறப்பை யுணர்ந்த தகைமையாளர்களாக—மாற்றிய மாண்புமிக்க மகான், சிசுவதையை ஒழித்துக் கட்டிய சிரேஷ்டர், மதிமயக்கத்தை யுண்டாக்கும் மதுபான வகைகளையும் மங்கையருடன் தகாத உறவையும் அழித்தொழித்த அண்ணல், சூதாட்டங்களைச் சட்டவிரோத மாக்கிய சன்மார்க்கர், பலதார மணத்துக்கு வரையறை வகுத்த வள்ளல்,—சுருங்கச் சொல்லுமிடத்து, சீர்திருத்த சீலரும் உண்மைக்கு உறைவிடமானவருமான உம்மி நபி (ஸல்) யை பாசாங்குக்காரர் பித்தலாட்டக்காரர் என்று பிதற்றுவது பிசகு என்பது நிதரிசனமாகத் தெரிகிறதன்றோ? ‘வேத ஞான வெளிப்பாடு அருளப்பெற்றதாக அவர்கள் அறிவித்தது அறிந்து சொல்லிய பொய்-மக்களின் மதிப்புக்குரிய தலைவராக வேண்டு மென்ற தகாத எண்ணத்தோடு நடிக்கப் பெற்ற வஞ்சக நாடகம்’ என்று எதிரிகள் எடுத்தியம்புவதில் எள்ளளவும் உண்மை இல்லை யென்பது கண்கூடு. தடைகளைக் கண்டு தயக்க முறுமலும் தடுமாறுமலும் தன்னம்பிக்கையும் தனியோன் மீது தளராத விசுவாசமும் கொண்ட தகையாளர் எம்பெருமான் முஹம்மது (ஸல்) கற்புக்கரசி கதீஜா (ரலி) விடம் முதல் வேதஞான வெளிப்பாடு சம்பந்தமாக வெளியிட்டது முதற்கொண்டு அழகி ஆயிஷா (ரலி) யின் அரவணைப்பில் அல்லாஹ்வினடி சேரும் வரை அரும் பெரும் காரியங்களைச் சாதித்திருப்பதிலிருந்து அவர்களுக்கு அல்லாஹ்வின் அருள் இருந்த தென்பது புலனாகிறது.

சொல்லிலும் செயலிலும்—வாக்கிலும் வாழ்விலும்—மகத்தான சீர்திருத்தம் செய்த செம்மல் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வின் அருள் இல்லாமல் இருந்திருக்குமா? மற்ற தீர்க்க தரிசிகளைப் போல அவர்களையும் அல்லாஹ்வின் அனுக்கிரகம் அருளப் பெற்ற நபி யென நம்பி நவில்வதைத் தடுப்பது எது? மாநிலத்தவரின் மாண்பை நிலைநாட்ட இறைவனால் தெரிந்தெடுக்கப்பெற்ற தீர்க்கதரிசி என ஏந்தல் முஹம்மது (ஸல்) அவர்களை அங்கீகரியா

மற் செய்வது எது? மத மாச்சரியமும் விரோதமும் குரோதமு மன்றோ?

அல்லாஹ் அருளிய அலுவலை அறிந்துணர்ந்து, அல்லாஹ் வின் அடியார், அருமைத் தூதர் என்ற ஹோதாவில் நாட்டில் நபிகள் நாயகம் (ஸல்) நல்ல சீர்திருத்தங்களைச் செய்தார்கள். அல்லாஹ்விடம் அண்ணல் நபி (ஸல்) அசைக்க முடியாத நம் பிக்கை, விசுவாசம் கொண்டிருந்தார்கள். எத்தர்களால் எள்ளி நகையாடப்பட்ட போதும் ஏந்தல் நபி (ஸல்) எள்ளளவும் பின்னடையாமல் பிரசாரம் செய்து வந்தார்கள். பயமுறுத் தலும் பலாத்காரச் செயல்களும் பண்பாளர் முஹம்மது (ஸல்) அவர்கள் பரமனின் ஏகத்துவத்தை எடுத்தியம்புவதையும் ஒழுக்க மேம்பாட்டை ஓதுவதையும் நிறுத்த முடியவில்லை. சகிப்புத்தன்மை யோடு வாக்கு வன்மை மூலம்-வாள் வலிமையினாலல்ல—சன்மார்க்கத் துக்கு மக்களை மகான் நபி (ஸல்) அழைத்தார்கள். நீதி, நேர்மை யோடு நடந்து அன்பும் அருளும் காட்டி தற்பெருமையின்றி தனி யோனின் முன்பு தாழ்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டுமென அரேபியர்களுக்கு, அவர்கள் மூலம் அவனியோர்க்கு அண்ணல் நபி (ஸல்) அறிவுறுத்தினார்கள். மரணமடைந்தோர் உயிர்த் தெழும்புதலும் அவரவரின் நல்வினை, தீவினைக்கேற்ப நற்பதவியும் தண்டனையும் அடைவதும் உண்டென்று உத்தம நபி (ஸல்) உபதேசித்தார்கள்.

மக்கமாநகரை வென்றதும், வெங்காபிர்களின் அநியாய, அக் கிரமச் செயல்களுக்கு வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பு வள்ளல் நபி (ஸல்)க்குக் கிடைத்தது. கொலைக்கஞ்சாத கொடிய பாதகர்களி டம் கொடுமையாக நடந்து கொள்ளாமல், அவர்களை அண்ணல் நபி (ஸல்) மன்னித்து விட்டார்கள். பகைவரிடத்தில்,—பஞ்சமா பாதகர்களிடத்தில்—பரிவு காட்டும் பண்பு படைத்தவர்கள் மகான் மஹ்மூது நபி (ஸல்) என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. "ஜா அல் ஹக்கு வ ஜஅகல் பாத்தில் இன்னல் பாத்தில கான ஜஹூகா" (உண்மை உதயமாகி விட்டது, அசத்தியம் அழிந்து விட்டது. உண்மையில் அசத்தியம் அழிந்து விடுவதாக விருக்கி றது) என்ற இறைமறை வசனத்தை ஓதிய வண்ணம் கஅபா ஷரீபி லுள்ள 360 விக்கிரகங்களையும் உத்தம நபி (ஸல்) உடைத் தெறிந் தார்கள். விக்கிரஹ வணக்க ஒழிப்பு வேலை பூர்த்தியானதும் வெற்றி கொண்ட நகரில் சிம்மாசனம் அமைத்து சிங்கார வாழ்வு நடத்தினார்களா? அல்லது, அண்ணல் அஹ்மது நபி (ஸல்) கஅபா வுக்கு அருகில் மாடமாளிகை கட்டித் தமது வெற்றிப் பிரதாபத்தை ஊழியூழிக்காலம் உலகினருக்கு உணர்த்துவதற்கு முனைந்தார்களா? கஷ்ட காலத்தில் கார்மானமளித்த கனவான்களான அன்ஸார் (உத

வியாளர்)களுடன் குடிசையில் வாழ்வதற்காக மதீனாவுக்குத் திரும்பிச் சென்றார்களல்லவா? பேராசை பிடித்தவர் என்று ஏந்தல் நபி (ஸல்) மீது சுமத்தப்படும் பழி ஆதாரமற்றது, அநியாயமானது என்பதற்கு இதைவிட சிறந்த உதாரணம் வேண்டுமா?

## இரண்டாவது குற்றச் சாட்டு.

பெருமானார் (ஸல்) போர்க்கோலம் தாங்கிப் போர்கள் புரிந்தார்கள் என்பது வாஸ்தவம். ஆனால் அவற்றின் நோக்கம் பிற மதங்களை நிர்மூலமாக்க வேண்டுமென்பதல்ல. மாறாக முஸ்லிம்களின் உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாப்பதும் நாட்டில் அராஜகமும் அமைதியின்மையும் ஏற்படாமல் தடுப்பதும் நாட்டுத் துரோக நடவடிக்கைகளை நாசமாக்குவதும் பரஸ்பரம் கொலை, சச்சரவுகளி லீடுபட்டிருந்த அரேபியர்களை ஐக்கியப்படுத்துவதும் விக்கிரஹ வணக்கத்திலிருந்து விடுவித்து, ஏக தெய்வ வழிப்பாடு அவர்களிடையே வேரூன்றச் செய்வதுமே அந்த யுத்தங்களின் நோக்கமாகும். ஆக்கிரமிப்பு எண்ணம் எதுவுமின்றி தற்காப்புக்காகவே முஸ்லிம்களை முஹம்மது (ஸல்) யுத்தங்களில் ஈடுபடுத்தவேண்டியதாயிற்று; மதீனாவுக்கு அருகிலேயே யுத்தங்கள் நிகழ்ந்திருப்பது இக்கூற்றை நிரூபிக்கிறது.

இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு இணங்கி நடப்பதற்கு இசைந்தவர்களிடம் தாராள மனோபாவத்தோடும் பெருந்தன்மையோடும் இறை தூதர் (ஸல்) நடந்து கொண்டார்கள். குற்றமிழைத்தோரை தண்டித்த அவர்கள் பெண்களிடத்திலும் குழந்தைகளிடத்திலும் அனுதாபம் காட்டினார்கள். குர்ஆன் ஷரீபை அல்லாஹ் அருளிய வேதகிரந்தமென அங்கீகரித்து அமல் செய்வதற்குச் சம்மதித்தவர்களனைவரையும் சகோதரர்களென பாவிக்குமாறு முஸ்லிம்களுக்கு முஹம்மது (ஸல்) உத்தரவிட்டார்கள். துன்பமிழைக்காதவர்களைத் துன்புறுத்த வேண்டாமென்றும் கண்டிப்பாக கட்டளையிட்டார்கள். கிறிஸ்தவர்கள் அவர்களது மதத்தைப் பின்பற்றுவதற்குப் பூரண சுதந்திரம் நல்கும் சாசனமொன்று வழங்கினார்கள். நீதி, மனிதத்தன்மை ஆகியவற்றுக்குப் புறம்பான கட்டளை யெதனையும் இஸ்லாமிய வேதகிரந்தத்தில் காண முடியாது. மாறாக, மறையோன் தந்த புர்கானில் கீழ் காணும் பொருள் தரும் வசனங்கள் நிறைந்திருப்பதைக் காணலாம்: "மார்க்கத்தில் பலவந்தம்—பலாத்காரம் இல்லை." "உங்களை எதிர்த்துப் போரிடுபவர்களுடன் அல்லாஹ்வின் பாதையில் போர் புரியுங்கள்; ஆனால், வரம்பு கடவாதீர்கள். ஏனெனில், வரம்பு கடப்போரை வல்லோன் நேசிப்பதில்லை".

"அவர்கள் சமாதானம் செய்து கொள்வதில் ஆர்வம் காட்டினால், நீங்களும் சமாதான ஆர்வம் காட்டி, இறைவன் மீது நம்பிக்கை வையுங்கள். அவன் கேட்பவனாகவும் காண்பவனாகவும் இருக்கிறான். உங்களை ஏமாற்றுவதற்கு அவர்கள் உத்தேசிப்பார்களாயின், நிச்சயமாக உங்களுக்கு அல்லாஹ் போதுமானவன்."

எனவே, ஏந்தல் நபி (ஸல்) மதப்பிரசாரத்தில் வாளின் வலிமையைப் பிரயோகித்தார்கள் என்ற பழி அபாண்டமானது, அவதூறானது, ஆதாரமற்றது என்பதை மேலே கூறிய உண்மைகளும் உதாரணங்களும் நிரூபிக்கின்றன.

## மூன்றாவது குற்றச் சாட்டு

இவ்வையக வாழ்க்கைக்குப்பிறகுள்ள மறு உலக வாழ்வில் சுவனலோகத்தில் மதுவும் மங்கையரும் அளிக்கப்படுமென்ற வாக்குறுதியைப் பொறுத்தவரையில் சிறிது சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்ப்போமாயின் குர்ஆன் ஷரீபில் காணும் இக்கூற்றில் விந்தை எதுவுமில்லை என்பது எளிதில் விளங்கும். தன்னிகரற்ற தாம்பத்ய வாழ்வும் மணமானவர்களிடையே மன ஒற்றுமையும் விரும்பத்தக்கவை என கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர் என்பதை நினைவில் கொள்வோமாயின், மறு உலக வாழ்விலும் இது போன்ற நிலை இருக்கும் என்பதில் எள்ளளவும் அதிசயமில்லை என்பது தெளிவு.

உயிர்த்தெழும்புதலின்போது நமது சிந்தனையில் சீர்தூக்கிப் பார்க்க முடியாத வகையில் உடல்கள் பூரண உருப்பெறும் என்பதையும் மற்ற புலன்களும் அசாதாரண சக்தி பெறும் என்பதையும் ஆலோசித்துப் பார்க்கும் பொழுது அப்புலன்களுக்குத் திருப்தியும் மகிழ்ச்சியு மளிக்கக்கூடிய வஸ்துக்களை விலக்கிவிட்டாலும் அச்சக்திகளைச் சாதாரணமாகப் பிரயோகிக்காமல் பிரயோஜன மற்றவையாக்கி விட்டாலும் நமக்கு நாமே நாசம் விளைவித்துக்கொள்வதாகும் என்பது புலனாகும். ஆன்மாவும் உடலும் திரும்ப நமக்கு அளிக்கப்படுமென நினைக்கும் பொழுது—நமது உடல்கள் பூரண நிலையில் உயிர்ப் பெறுவதா யிருந்தால் இவ்வாறுதான் நிகழ வேண்டும்—புலன்களுக்குரிய பொருட்கள் இருக்கக்கூடா தென்று நினைப்பதற்கு நியாயமென்ன விருக்கிறது? புலன்கள் இருக்கும் பொழுது அவற்றால் அடையக் கூடிய ஆனந்தமும் ஆத்ம திருப்தியும் கிடைக்கப் பெறுமென்பதில் பாவம், பழி, வெட்கம், வெறுப்பு ஏனோ இருக்க வேண்டும்? வெட்கக் கேடானதென் வெறுத் தொதுக்கப்படும் ஆண் பெண் உறவு இன்பத்தைப் பொறுத்தவரை, உலகில் உதித்த உன்னத தம்பதிகள் இருவருக்கும் அந்த இன்பத்தை இறைவன் அளிக்க வில்லையா? அவனியில் தோன்றிய அந்த தம்பதிகளுக்குத் தாராளமாக இல்லற இன்பத்தை வழங்கியது போலவே

இன்றுன விருத்திக்கு விரும்பத்தக்க பேறுகளனைத்தையும் அவர்களது சந்ததியினருக்கும் அளித்து, அச்செயலில் அளவிலா ஆனந்தமும் ஆத்ம திருப்தியும் கொள்ளுமாறு ஆண்டவன் செய்திருக்கிறுன்.

சுவனலோகத்தில் நன்னம்பிக்கை கொண்டவர்களுக்கு அழகிய ஆரணங்களை அல்லாஹ் அளிப்பானென்று அண்ணல் அஹ்மது நபி (ஸல்) அறுதிமானம் அளித்திருப்பது வாஸ்தவந்தானெனினும் அதிலே மட்டற்ற மகிழ்ச்சி, பிரதான திருப்தி இருப்பதாக இறைதூதர் இயம்பி யிருக்கவில்லை. இறைவனது திருவதனத்தைக்கண்டு களிக்கும் பேறு ஆன்மாவுக்கு விசேஷமாக உரியது என்றும் அக்காட்சிதான் கண்களுக்குக் குளிர்ச்சியும் மனத்துக்கு மகிழ்ச்சியும் உள்ளத்துக்கு உவகையும் அளிக்கவல்லது என்றும் எம்பெருமான் (ஸல்) எடுத்தியம்பியுள்ளார்கள். எனவே, உடலும் ஆன்மாவும் அவற்றுக்குரிய ஆனந்தத்தை அடையுமென்பதையும் இறைவன் அளித்துள்ள சக்திகளிலெதுவும் வீணுகிப்போகா தென்பதையும் இறுதி இரஸூல் (ஸல்) ஒப்புக்கொண்டிருக்கிறுர்கள். கிறிஸ்தவ வேதாகமத்தில் "ஸாலமனின் கீர்த்தனைகள்" எவ்வாறே அவ்வாறே சுவனலோகம் பற்றிய வர்ணனைகளும் உவமையாகக் கூறப்பெறவில்லை, அவை ஆத்மீகப் பொருள் கொண்டவை என முஸ்லிம் அறிஞர்கள் அபிப்பிராயப்படுகிறுர்கள். "எந்தக் கண்ணும் கண்டிராததும் எந்தக்காதும் கேட்டிராததும் மனிதனின் மனது சிந்தித்துப் பார்த்திராததுமான வொன்றை எனது நேர்மையான அடியார்களாக ஆயத்தம் செய்து வைத்திருக்கிறேன்" என்று அல்லாஹ் அருள் மொழி கூறியிருக்கிறுன்" என்று எம்பிரான் (ஸல்) எடுத்தியம்பி யிருப்பது இங்கு கவனத்துக்குரியது. "கண்களுக்குக் குளிர்ச்சி அளிக்கக் கூடியதில் மறைத்து வைக்கப்பட்டிருப்பதை அவர்கள் செய்ததற்குச் சன்மானமாக—எந்த ஆன்மாவும் அறியாது" என்ற இறைமறைவாக்கும் இங்கு நினைவு கூறத்தக்கது.

சுவனலோகத்தைப் பற்றிய முஹம்மது (ஸல்) அவர்களின் வர்ணனைகள், அந்நபியின் குணத்தைப் பிரதிபலிப்பதாக விருக்கிறது என்ற குப்பார்களின் கூற்று அநியாயமானது, அபத்தமானது. ஏனெனில், எந்தல் நபி (ஸல்) ஏழைமையில் ஏற்றம் காண்பவர்களாகவும் துன்பத்தில் இன்பம் காண்பவர்களாகவும் இருந்தார்களென்பதும் உலகமக்கள் உவகையோடு, உள்ளத்திருப்தியோடு நாடித்தேடிய ஆசைகளிலும் ஆனந்தங்களிலும் ஆர்வம் கொள்ளாமல் ஆத்மீக நாட்டமும் தேட்டமும் கொண்டவர்களாக இருந்தார்களென்பதும் உலகறிந்த உண்மை.

## நான்காவது குற்றச் சாட்டு.

நாயனின் நண்பர் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் காலத்திலிருந்து உலகில் பலதாரமணம் பழக்கத்திலிருந்து வருகிறது. கிறிஸ்தவ வேதாகமத்தின் பல பகுதிகளைப் பார்க்கும் பொழுது, பலதாரமணம் பாவமான செயலென பாவிக்கப்படவில்லை என்பது புலனாகிறது.

புளுடார்ச் புகல்கிறபடி, புராதனக் காலத்து கிரேக்கர்களிடையே பலதாரமணம் அனுமதிக்கப்பட்டிருந்தது. யூரிபிடிஸூம் பிளாடோவும் அப்பழக்கத்தை ஆதரித்தனர். ரோமானியர்கூட இப் பழக்கத்துக்கு அடிமையாகி யிருந்தனர். மார்க் அந்தோனி இரு தாரங்களை மணந்திருந்ததாகவும் மதகுருவின் ஆக்ஷேபமில்லாவிடில் சாம்ராஜ்யப் பிரஜைகள் எவரும் பிரியப்பட்டால் பலமனைவியர்களை மணந்துகொள்ளலாமென்ற சட்டத்தை சக்கரவர்த்தி வாலன்டினியன் பிறப்பித்தார். பிரான்ஸ் தேசத்து தொண்டைமான் குளோடேரும் அவரது புதல்வர்களான ஹெரிபார்டஸ், ஹைபரிகஸ் ஆகிய இருவரும் சார்ல் மாக்னியும் ஜெர்மன் நாட்டு சக்ரவர்த்தி ஆர்னுல்பஸூம் மற்ற மணிமுடிதரித்த மன்னர்களும் பலதாரங்களை மணந்திருந்தனர் என்பதற்குச் சரித்திரம் சாக்ஷியாக இருக்கிறது.

முற்காலத்தவரிடையே மூடத்தனமான பழக்க வழக்கமொன்று இருந்து வந்ததென்று தெரிகிறது. பத்து அல்லது பன்னிரண்டு ஆடவருக்கு ஒரு ஆரணங்கு தாரமாக இருந்தாள்! முரடர்களும் மூடர்களுமான இம்மக்களிடையே பிரசாரம் செய்வதற்குச் சென்ற ரோமன் கத்தோலிக்க மிஷனரிகள், பிரம்மசாரியத்தைப் பிரசாரம் செய்தனர்; விதவையை வீரனொருவன் மணந்து கொள்வது இரு தார மணத்துக்குச் சமமான செயலென்றும் ஆகவே மதச்சட்டப் படி அது தண்டனைக்குரிய குற்றமென்றும் அவர்கள் அபிப்பிராயப் பட்டார்கள். இறுதியில் ஒருதாரமணப் பழக்கம் படிப்படியாக நிலைபெற்றது.

கீழ் ஜெர்மனியில் மதகுருவாகவிருந்த போனிபஸூக்கு கி. பி. 726-ம் வருடம் நவம்பர் மாதம் 22-ந் தேதி எழுதிய பதிலில் போப் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். "ஆண்-பெண் உறவு இன்பத்துக்கு இலாயக்கற்றதாக்கும் வியாதியால் மனைவி பீடிக்கப் பெற்றிருந்தால், அவனது கணவன் மற்றொரு மங்கையை மணந்து கொள்ளலாம். ஆனால் இவ்விஷயத்தில் நோயுற்றிருக்கும் மனைவிக்கு அவசியமான எல்லா ஆதரவையும் அனுசரணையையும் அவன் அளிக்க வேண்டும்."

பலதார மணப் பழக்கத்துக்குப் பக்கபலமாகப் பல புத்தகங்களைக் கிறிஸ்தவர்கள் எழுதி யிருக்கிறார்கள். யூதர்களிடையேயும்

மற்றெல்லா சமூகங்களிடையேயும்கூட பலதார மணம் அனுஷ்டானத்திலிருந்தது.

பலதார மணப் பழக்கத்துக்குப் பக்கபலமாக எழுதி யிருப்பவர்களில் பிரசித்திப்பெற்றவர் ஆங்கில கவி ஜான் மில்டன் ஆவர். "கிறிஸ்தவ கோட்பாடு பற்றிய சிறு நூல்" (Treatise on Christian Doctrine) என்னும் நூலில் கிறிஸ்தவ வேதாகமத்தின்படி பலதாரமணம் செல்லுபடியாகக் கூடியது என்று அவர் நிரூபித்துக் காட்டியுள்ளார். எனவே, ஏந்தல் நபி முஹம்மது (ஸல்) பலதார மணப் பழக்கத்தை முதல் தடவையாக அனுஷ்டானத்துக்குக் கொண்டு வரவில்லை யென்பதும் அப்பழக்கத்துக்கு வரையறையும் நிபந்தனையும் விதித்துள்ளார்களென்பதும் நிரூபணமாகிறது. ஒன்றுக்கு அதிகமான மனைவியர்களை மணந்து கொள்வதற்கு விரும்புபவர், எல்லா மனைவியர்களையும் சமமாகப் பாவித்து கண்ணியமாக நடத்த வேண்டுமென்ற நிபந்தனையை நபிகள் நாயகம் (ஸல்) ஏற்படுத்தி யிருக்கிறார்கள். எல்லா மனைவியர்களுக்கிடையில் சமநிலையை நிலைநிறுத்திச் சமமான அன்பும் அபிமானமும் செலுத்துவதற்கு கணவனால் முடியாமற் போகுமாயின் ஒரு மனைவியை மட்டுமே அவன் மணந்து கொள்ளலாம். மணப்பெண்ணின் மன இசைவு பெறாமல் மணம் கூடாதென்ற விதியை இஸ்லாம் ஏற்படுத்தி யிருப்பதால் முதல் கலியாணத்துக்குப் பிறகு கணவன் மணம் புரிய விரும்பும் மங்கை அம்மணத்துக்குச் சம்மதிக்க வேண்டு மென்பது இங்கு கவனிக்கத் தக்கது.

முஸ்லிம்களிடையே பலதார மணம் அபூர்வமாகவே காணப்படுகிறது. முதல் மனைவி பிள்ளைப் பேறு இல்லாதிருந்தால், அல்லது, அவள் தீர்க்கமுடியாத பெரும் வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தால் தான் இரண்டாவது தாரத்தை முஸ்லிம்கள் கொள்கின்றனர். யுத்தத்தில் ஆண்கள் அதிக அளவில் உயிர் துறந்து ஆண்களைவிட பெண்கள் அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்திலும் விதவைகளை மணந்து கொள்வதன் மூலம் விதவைகளுக்கும் அனாதைக்குழந்தைகளுக்கும் ஆதரவு அளிக்கும் நோக்கத்துடன் இரண்டாவது விவாகம் செய்து கொள்வதுண்டு. ஐரோப்பாவில் ஒரு ஆடவன் ஒரு மனைவியையும் ஒரு வெள்ளாட்டியையும் வைத்திருப்பதைச் சர்வ சாதாரணமாகக் காணலாம். ஆனால், முஸ்லிமொருவன் காதலியையும் கடிமணம் புரிந்து அவளது குழந்தைகளுக்கும் சட்ட பூர்வமான அந்தஸ்து அளித்து விடுகிறான். எனவே, முஸ்லிம் சமுதாயத்தில் கள்ளக் குழந்தைகளையோ அல்லது 'யுத்தபுத்திரர்' களையோ காணமுடியாது; "மணமாகாத மாதா" என்ற அவமான சொல் அல்லது வெட்கக் கேடான வார்த்தையை கேட்கவும் முடியாது.

(தொடரும்.)

# கீமியாயே ஸஆதத்து

## தமிழ் பொழிப்புரை

### 1-வது வால்யம்.

இந்த கிதாபில் உள்ள சில விஷயங்களாவன:—

1-வது, தன்னையும் தனக்கு ஆதாரமான தலைவனையும் அறியாமல் பின்னை யொன்றை தானென்றும் தலைவனென்றும் கருதுகிற பேர்களுக்கு இக்கிதாபு உணர்வை வரவகைக்கும்.

2-வது, அநாதார பதர் மொழிகளால் நிறைந்த சில அஞ்ஞான புத்தகங்களை மெஞ்ஞான பொக்கிஷங்களென மதித்து மருண்டு கிடக்கின்ற மதியீனர்களின் மனதைத் திருப்பும்.

3-வது, இகபரங்கள் இன்ன தென்றறியாமல் இலோக இச்சைகளிலேயே மூழ்கி இரவும் பகலும் இதற்கே தொண்டு செய்து பரலோக வாழ்க்கையைப் பற்றி சிந்திக்காதிருக்கிற பேதை மாந்தர்களுக்கு இகபர விருப்பத்தை யூட்டும்.

4-வது, இபாதத்து செய்கிறவர்களுக்கு சுன்னத்து ஜமாஅத்துகளின் இஃதிகாது, இல்மை தேடல், ஒலுவு, முழுக்கு, தயம்மம் முதலிய சுத்தி வகைகள், தொழுகை, நோன்பு, ஸக்காத்து, ஹஜ்ஜு, குர்ஆன் ஓதல், திக்று அவ்ருது இவைகளின் அஹ்காம்களும் அஸ்ருருகளும் சொல்லப்பட்டிருப்பதால், இது அமல் செய்கிறவர்களுக்கு மிகவும் பிரயோஜனத்தைக் கொடுக்கும். இதன் அருமை கிதாபைப் பார்த்தால் தான் அறியலாம்.

இதன் 1-வது வால்யத்தில் இபாதத்துகளுடைய பயானும், 2-வது வால்யத்தில் முஆமலாத்துடைய பயானும், 3-வது வால்யத்தில் முஹ்லிகாத்தின் பயானும், 4-வது வால்யத்தில் முன்ஜிபாத்துடைய பயானும் அடங்கி யிருக்கின்றன.

1-வது வால்யம் புதிய அச்சு கலிகோ பைண்டு விலை ரூ. 3

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ், 5.

# பிச்சைக்காரன்.

எம். எ. மீருன் மொஹிதீன் எழுதியது.

நீர்வளமும், நிலவளமும், நன்செய்-புன்செய் விளையும் தமிழ் நாட்டின் தலைநகரமாக விளங்கும் சென்னைமா நகரத்தில் பலதரப் பட்ட வகுப்பார் வசிக்கும் திருவல்லிக்கேணிப் பகுதியில் மூன்றடுக்கு மாடிவீட்டின் வாசல் படியில் 28 வயதுள்ள ஒரு பிச்சைக்காரன் கையில் திருஓட்டுடன் 'அம்மா! தாயே! பிச்சைப் போடம்மா' என்று தீனக்குரலில் கேட்டான்.

கந்தல் ஆடையும், வாடிய முகமும், குழி விழுந்த கண்களும், ஒட்டிய கன்னங்களும், மெலிந்த தேகமும், எண்ணெயைக் கண்டு எத்தனையோ நாட்களாகிவிட்ட பரட்டை தலையுடன் நின்று கொண்டு பிச்சைக் கேட்டதுபார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது.

அந்த வீட்டின் உள்ளிருந்து 'போப்பா, போய் மறுஇடம் கேள்' என்று ஒரு குரல் வந்தது. 'தாயே எல்லாரும் அப்படித்தான் சொல்றுங்கோ தாயே. மறு இடம் போய்க் கேள்; மறு இடம் போய்க் கேள் என்று. பழைய சாதமாவது இருந்தால் போடுங்க தாயே!' என்று தீனக் குரலில் மறுபடியும் அழைப்பு விடுத்தான்.

'இந்தப் பிச்சைக்காரன்க தொல்லையே பெரிசாபோச்சு. பொழுது விடிஞ்சா, பொழுதுப் போனு விருந்தாளி மாதிரி முதல்லே வந்துட் றுன்கோ' என்று சத்தம் போட்டுக் கொண்டே வாசலுக்கு வந்து 'ஏய் சொன்னு போகமாட்டே. ஒருக்கச் சொல்றேம்மே காது கேக் கலே. போ போ போயி மறுஇடம் கேள்' என்று சத்தம்போட்டாள்.

சமையல்காரியின் சத்தத்தைக் கேட்டு மாடியிலிருந்த சாந்தா 'என்ன மரகதம், யாருடன் சண்டை போடுறே' என்று கேட்டுக் கொண்டே அங்கே வந்தாள்.

'ஒண்ணுமில்லேம்மா. பிச்சைக்காரனைப் போ என்று சொன் னேன். வேறென்றுமில்லேம்மா' என்ருள்.

அங்கு நின்று கொண்டிருக்கும் பிச்சைக்காரனைப் பார்த்து 'ஏம்பா இந்த சின்ன வயசிலே பிச்சை எடுக்கிறியே வெட்கமா இல்லே. எங்காவது வேலை செய்து சாப்பிடுவதுதானே' என்று சாந்தா கேட்டாள்.

'எனக்கு உழைத்துச் சாப்பிட உள்ளத்திலே ஆசை தானம்மா. ஆனல் வேலை கொடுக்கிறவர்கள் யாரம்மா இருக்காங்கோ. நானும் வேலைத் தேடி அலையாத இடமில்லை. கூலி சுமக்கலாம் என்றுலோ புதுக் கூலிக்காரனுக்கு யாரும் கூலிப் போடமாட்டே னென் கிருர்கள். எத்தனை நாளைக்குமா பசிப்பட்டினியால் சாகாமல்

சாகிறது. அதனல் இந்தப் பிச்சைத் தொழிலாவது செய்யலா மென்று நினைத்து பிச்சை எடுக்கிறேன்.'

'பிச்சைக் கேட்டாலும் மறு இடம் போய்க் கேள் என்று ஒவ்வொரு வீட்டிலும் சொல்கிறர்களே தவிர மனமிரங்கி யாரும் பிச்சைப் போடவில்லை. கோபுரத்தைப்போல் கட்டிடங்களைக் கட்டிக் கொண்டு மாளிகை வாசிகளாக இருக்கிறர்களே ஒழிய அவர்களுடைய உள்ளமும், எண்ணமும் கோபுரத்தைப்போல் உயர்ந்ததாக இல்லையம்மா. எல்லாப் பணக்காரர்கள் மனமும் அப்படித்தாம்மா இருக்கு' என்று சொன்னன்.

'எம்பா இவ்வளவு நல்லாப் பேசறியே. உனக்கு அப்பா அம்மா யாருமில்லையாப்பா' என்றுள்.

'அப்பா சின்ன வயதிலேயே இறந்து விட்டார். அம்மா தான் எங்கெல்லாமோ வேலை செய்து என்னைப் பத்தாவது வரையில் படிக்க வைத்தார்கள். பத்தாவது படித்துக் கொண்டிருக்கும்போது என் அம்மாவும் என்னைத் தனியாகத் தவிக்க விட்டுட்டு இறந்துட்டாங்கோ. நானும் பத்தாவதுவரை படிப்பை முடித்துக் கொண்டு வேலைக்காக ஒரு இடம் பாக்கியில்லாமல் அலைந்தேன். எங்கும் வேலைக் கிடைக்கவில்லை. இப்படியே சும்மா இருந்தால் வயிறு சும்மா இருக்குமா? வீட்டிலுள்ள சாமானை ஒன்று ஒன்றுகக் கொண்டு விற்றுச் சாப்பிட்டு வந்தேன். எல்லாம் விற்றுய் விட்டது. இனி என்னைத் தவிர விற்பதற்கு ஒன்றுமில்லை. இந்த நிலைமையில் வீட்டுக்காரன் குடிக்கூலிப் பணம் கொடுக்கவில்லை என்று வீட்டைக் காலிச் செய்யச் சொன்னன். வேறு வழியில்லாமல் வீட்டைக் காலிச் செய்து கொடுத்து விட்டு மறுபடியும் வேலை தேடுவதும் தண்ணீரைக் குடித்துவிட்டு எங்காவது ஒரு திண்ணையில் தூங்குவது மாகக் கொஞ்சநாள் காலத்தைத் தள்ளினேன். வறுமை வாட்ட அந்த வறுமையினல் ஏற்பட்ட பசி வயிற்றைக் கிள்ள பொறுக்க முடியாமல், பசித் தாங்க முடியாமல் இந்தப் பிச்சைத் தொழிலில் இறங்கினேன். ஆனல், இதுவும் வயிறுர உணவைக் கொடுக்கவில்லை. கழுதை மேலேறியும் காலிரண்டும் கீழ் என்பது போல் பிச்சைத் தொழிலிலும் சரிவர பசியைப் போக்கவில்லை' என்றுன்.

'உன் கதையைக் கேட்ட பிறகுப் பரிதாபமாகத்தான் இருக்குது. சாப்பாடு போடச் சொல்றேன். சாப்பிட்டுட்டு இங்கே இரு. அப்பா இப்போ வருவார். அப்பாவிடம் சொல்லி உனக்கு ஏதாவது வேலைத் தர சொல்றேன்' என்று சொல்லி 'மரகதம், சாப்பாடு போடு' என்று கட்டளை யிட்டாள்.

சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது 'நல்லா சாப்பிடப்பா. எம்பா உன்பேரென்ன. அதைக் கேக்க மறந்தே போனேன்' என்றுள். 'திருஞானம்' என்று பதில் சொன்னன்.

சாப்பிட்டுவிட்டு வாசலில் உட்கார்ந்திருக்கும்போது கார் வந்து நின்றது. கார் வந்தவுடன் எழுந்திருந்து நின்ருன். காரிலிருந்து பாலசுந்தர முதலியார் இறங்கி பார்க்கும்போது கந்தல் ஆடையுடன் ஒருவன் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து 'ஏய் யார் நீ? எங்கே வந்தே? இங்கே எதுக்கு நிக்கிறே?' என்று கேட்டார்.

'அம்மா இருக்கச் சொன்ஞங்க' என்ருன் பயந்து கொண்டே.

'அம்மாவா! அது யார்ரா அம்மா. என்னடா முழிக்கிறே. ஏமாந்திருந்தால் எதையாவது சுருட்டிக் கொண்டுப் போகலாமென்று நினைத்து நிக்கிறியா. போடா வெளியே போடா' என்று துரத்திக் கொண்டிருந்தார்.

அப்பாவின் சத்தத்தைக் கேட்டு உள்ளிருந்த சாந்தா வெளியே வந்து, 'அப்பா அப்பா அவரைத் துரத்தாதீர்களப்பா. நான்தான் இருக்கச் சொன்னேம்பா' என்ருள்.

'ஏம்மா! எதுக்கு இருக்கச் சொன்னே.'

'அப்பா இவர் கதையைக் கேட்டா ரொம்பப் பரிதாபமா இருக்குதப்பா' எனறு சொல்லி திருஞானத்தின் வாழ்க்கையைப் பற்றிச் சொல்லி 'நம்ப ஆபீஸிலே கிளார்க் வேலே காலி இருக்குதுன்னு சொன்னீங்களே, அந்த வேலையை இவருக்குக் கொடுத்து நம்ம வீட்டிலேயே நமக்குத் துணையாக வைத்துக் கொள்ளலாம்பா' என்ருள்.

'ஏம்மா முன்பின் தெரியாத ஆளுக்கெல்லாம் வேலேக் கொடுத்து வீட்டில் எப்படியம்மா வைத்துக் கொள்கிறது?' என்ருர்.

'அப்படி யொன்றும் அவர் கெட்ட நடத்தை உள்ளவராகத் தெரிய வில்லேயப்பா. நல்ல குடும்பத்தில் பிறந்தவர் போல் தெரிகிறது. காலம் செய்த சதியால் பிச்சைக்காரஞக மாறி விட்டார். அப்பா எனக்காக வேலே கொடுங்களப்பா' என்ருள்.

தாயை இழந்த சாந்தாவை பாலசுந்தரமே தாயும் தந்தையுமாக இருந்து செல்வமாக அவளுக்கு யாதொரு குறைவு மில்லாமல் வளர்த்து பெரியவளாக்கிஞர். அந்தச் செல்ல மகளின் ஆசையை அவரால் தட்ட முடியவில்லே. 'சரிம்மா உன்னிஷ்டம் போலவே நடக்கிறேன்' என்று சொல்லி 'நாளேயி லிருந்து என்னுடன் வந்து வேலேயை ஒப்புக் கொண்டு இங்கே இரு. ஒழுங்காக உண்மையுடன் வேலே செய்ய வேண்டும்' என்று சொல்லி உள்ளே அழைத்து அவனுக்கு வேண்டிய வசதிகளே எல்லாம் செய்து கொடம்மா என்ருர்.

'வாப்பா' என்று உள்ளே அழைத்துச் சென்று தன்னறைக்குப் பக்கத்து அறையை அவனுக்காக ஒதுக்கி எல்லா வசதிகளேயும் செய்து கொடுத்தாள்.

தன் மீது இவ்வளவு இரக்கமும், பாசமும், அக்கறையுங் கொண்ட சாந்தாவிடம் மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தான். தன்னை வாழ்விக்க வந்த பெண் தெய்வம் என்று பெருமைக் கொண்டான். தன் வாழ்விற்கு வழி காட்டிய மனித உள்ளம் படைத்த மாணிக்கம் என்று மனமார வாழ்த்தினுன்.

திருஞானம், பாலசுந்தரம் ஆபீஸில் வேலை செய்ய ஆரம்பித்து இரண்டு மாதங்களாகி விட்டன. சரியான ஆகாரமும், நல்ல உடையும், உள்ளத்திலே உற்சாகமும் உண்டாகவே, இயற்கையாகவே அழகுள்ள திருஞானம் செயற்கையும் சேர்ந்து கொண்டதால் முன்னைவிட பன்மடங்கு அழகாக இருந்தான். வேலையில் காட்டிய ஆர்வத்தாலும், கடமையை உணர்ந்து பணியாற்றியதாலும், மரியாதையுடன் நடந்து கொண்டதினுலும் பாலசுந்தரத்தின் மனதை வெகு சீக்கிரத்திலே கவர்ந்து விட்டான். மானேஜராகவும் உயர்த்தப்பட்டான். பதவி உயரவே அதற்கேற்றுர் போல் நடை உடை எல்லாமே மாறி விட்டது. நாகரீக உடை அவன் அழகிற்கு அழகு செய்வதாக இருந்தது. பார்ப்போர் மனதை யெல்லாம் பறி கொடுக்கும் நிலையிலிருந்தது அவன் அழகு. ஆபீஸிற்குச் சென்றுல் எல்லாரும் அவனையே கண் கொட்டாமல் பார்ப்பார்கள். இவ்வளவு இருந்தும் அவன் மனதிலே கடுகளவேனும் கர்வமோ, திமிரோ, அதிகார ஆனவமோ, அகம்பாவமோ அவனிடத்தில் ஏற்பட்டதில்லை. எல்லோரிடமும் சகஜமாகப் பேசுவான் பழகுவான். சாந்தாவிடம் பேசும் போதும், பழகும் போதும் எவ்வளவு மரியாதையுடனும், மதிப்புடனும் நடக்க வேண்டுமோ அந்த விதமாக நடந்து கொண்டான். ஆனுல், சாந்தாவோ அவன் அழகிலே தன் இதயத்தை எல்லாம் பறி கொடுத்தாள். அவனுடைய அன்பிற்காக அல்லும், பகலும் ஏங்கிக் கொண்டிருந்தாள். அவன் அகண்ட மார்பை ஆசையோடு அணைக்கும் பாக்கியம் வாராதா என்று வாட்டமுறுவாள். பருத்து திரண்டு இருக்கும் அவனுடைய தோள்களைப் பிடித்துக் கொண்டு கொஞ்சி விளையாடும் காலம் வராதா என்று கண்ணீர் விடுவாள்.

அவனுடன் பேசும் பொழுதெல்லாம் தன் ஆசையை வெளியிடலாம் என்று வாயெடுப்பாள். ஆனுல், ஏனே அவளால் அந்த ஆசையைச் சொல்ல முடிவதில்லை. கடைசியில் ஒரு நாள் கேட்டு விடுவது என்று முடிவு செய்தாள்.

ஒரு நாள் இரவு சாப்பாட்டிற்குப் பிறகு திரு ஞானம் இருள் சூழ்ந்த உலகிற்கு ஒளியைத் தந்துக் கொண்டிருக்கும் சந்திரனின் அழகையே பார்த்து ரஸித்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது சாந்தா அவனறைக்கு வந்து, 'என்ன மானேஜர் சார்! ஆழ்ந்த யோசனையில் வானத்தையே உற்று நோக்கிக் கொண்

டிருக்கிறீர்களே. எந்தக் கோட்டைப் பிடிப்பதற்கு இந்தப் பலமான சிந்தனை?' என்றாள்.

'நீங்களா வணக்கம். இந்த ஏழையைத் தேடி இவ்வளவு தூரம் வருவானேன். சொல்லி அனுப்பி இருந்தால் நானே வந்திருப்பேனே உட்காருங்கள்' என்றான்.

'அந்த ங்களாவை எடுத்து விட்டு முன்னால் இருக்கும் எழுத்தை மட்டும் சொன்னால் போதும். தூக்கம் வரவில்லை. சற்று நேரம் உங்களிடம் பேசி விட்டுப் போகலா மென்று வந்தேன்' என்றாள்.

'எதைப் பற்றி பேசலாம். சொல்லுங்கள்' என்றான்.

'மறுபடியும் அந்த நீங்களென்ற வார்த்தையைச் சொல்லாதீர்கள்.'

'நான் எப்பொழுதும் உங்களுக்குக் கீழ்படிந்தவன். உங்கள் உத்திரவுகளை தலை மேல் சுமப்பவன். நீங்கள் இடும் கட்டளையை என் உயிரைக் கொடுத்து நிறைவேற்ற கடமைப்பட்டவன். உங்கள் அடிமை. ஆகவே, நான் எப்பொழுதும் உங்களை மரியாதையாகவும், மதிப்பாகவும் நினைக்கிறேன். நான் இருக்கும் இந்த நிலைமை உங்களால் ஏற்பட்டது. உங்களன்பினாலும், ஆதரவினாலும் உயர்ந்த நிலைமைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறேன். அந்த அன்பு தெய்வத்தை என் 'நா' 'நீ' என்று அழைக்காது. நடைப்பிணமாகப் பிச்சைக்கார உருவத்தில் தெரு தெருவாக நாதியற்று, கேட்பாரற்று அலைந்த என்னை உங்கள் நல்லெண்ணம் என்னை நாலு பேர் முன்னிலையில் மனிதனாக்கியது. அப்பேர்ப்பட்ட உங்களை நான் ஒரு போதும் நீ என்று அழைக்க மாட்டேன்' என்றான்.

'ஞானம்! என்ன இன்று இப்படிப் பேசுகிறீர்கள். நான் யாரும் செய்ய முடியாததை ஒன்றும் செய்து விடவில்லையே. மனிதப் பிறவிகள் செய்யும் காரியத்தைத் தானே செய்தேன், நானும் மனிதப் பிறவியாக இருப்பதினால், எனக்கும் உள்ளம் என்று ஒன்று இருப்பதினால் உலகத்தில் செய்யாததை நான் ஒன்றும் அப்படி பிரமாதமாகச் செய்துவிட வில்லை. என்னவோ, என்று உங்களைப் பார்த்தேனோ அன்றிலிருந்து இனமறியாத ஒரு பாசம் உங்கள் மீது ஏற்படுகிறது. உங்களைப் பார்க்க வேண்டும், நாளெல்லாம் உங்களிடமே பேசிக் கொண்டிருக்க வேண்டு மென்று என் உள்ளம் எவ்வளவு ஆசையுடன் துடிக்கிறது தெரியுமா. நானல்லவோ உங்கள் அடிமை. உங்கள் அன்புக் கட்டளைகளை ஆசையுடனும், கடமையுடனும் நிறைவேற்ற காத்துக் கிடக்கும் உங்கள் காதலி நான். உங்களன்பின் அடிமை. உங்களின்பத்தின் எல்லை நான்' என்றாள்.

ஞானம் ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறான்.

187054

'ஏன் விழிக்கிறீர்கள். பொய் என்று எண்ணுகிறீர்களா. கனவு காண்கிறேமா என்று நினைக்கிறீர்களா. இல்லை. உண்மையாகவே சொல்லுகிறேன் அன்பே! என் உள்ளத்திலே உங்களொருவருக்குத் தான் இடமுண்டு. என் இதயத்திலே அழியாத சித்திரமாகப் பதிந்து விட்டீர்கள். இனி அதை அழிக்க யாராலும் முடியாது இன்பமே! உங்கள் இதயத்திலே எனக்கு இடமளிப்பீர்களா கண்ணு! உங்களன்பு என் ஆசைக் கனவுகளை நிறைவேற்ருதா அன்பரே! நான் எண்ணிக் கொண்டிருக்கும், கட்டிக் கொண்டிருக்கும் கோட்டை, கொத்தளங்களுக்கு ஏந்தலாக இருந்து அரசு செலுத்த மாட்டீர்களா?' என்ருள்.

''உண்ட வீட்டிலே இரண்டகம் செய்வதா? நன்மை செய்தவர்களுக்கு தீமை செய்வதா? அன்னமிட்ட வீட்டிலே கன்னக்கோல் வைப்பதா? தஞ்சம் அளித்தவர்களுக்கு துரோகம் செய்வதா? அன்புடன் ஆதரித்தவர்களிடம் அயோக்கியத்தனமாக நடப்பதா? முடியாது. என்னல் இந்த காரியத்தைச் செய்ய முடியவே முடியாது. தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்.''

''எது துரோகம்? எது தீமை? எது அயோக்கியதனம்? நீங்களாக என்னை மனம் செய்துகொள்ள பலவந்தப்படுத்தினலல்லவோ துரோகமாகும்; வஞ்சகமாகும். நானே உங்களை மணம் செய்து கொள்ளவிரும்பும் பொழுது நீங்கள் எப்படி துரோகியாவீர்கள்? எப்படி வஞ்சகராவீர்கள்? எந்தவிதத்தில் மோசக்காரர் நீங்கள்? நீங்களில்லாவிட்டால் மரணத்தைத் தவிர வேறுவழியில்லை. சொத்து, சுகம்,வீடு, வாசல் எல்லாவற்றையும் இழக்க துணிந்து விட்டேன். எனக்குச் சகலமும் நீங்கள் தான்'' என்ருள்.

''தயவு செய்து இந்த ஒரு விஷயத்தில் என்னைத் தொந்திரவுச் செய்யாதீர்கள். சொத்தை அபகரிக்க உங்களை மயக்கி விட்ட மாபாதகன் என்று அப்பா நினைப்பார். உபகாரம் செய்தவர்களுக்கு அபகாரம் செய்ய நினைக்கும் அயோக்கியன் என்று எண்ணுவார். நடுவீதியில் திரிந்தவனை நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்தவர்களுக்கு துரோகம் செய்ய நினைக்கிருன் நயவஞ்சகன், நச்சுஎண்ணமுள்ளவன் என்று நினைப்பார். கருணை காட்டியவர்களுக்கு கேடுசெய்ய நினைக்கும் குள்ளநரி குணம் படைத்தவன் என்று நினைப்பார். எனவே, என்னை தயவுசெய்து மன்னித்து மறந்துவிடுங்கள்'' என்ருன்.

''உங்களை மறப்பதா! என் உயிரினுமேலாக நேசித்த உங்களை மறப்பதா. என் இதயக் கோயிலிலே அன்பு தெய்வமாக வைத்து, ஆசை என்ற விளக்கை யேற்றி, பாசமென்ற மலரைத்தூவி, நேசமுடன் பூஜித்து வந்ததற்கு நல்ல பலன் கிடைத்து விட்டது. யாருடைய மோகன உருவத்தை, சுந்தர ரூபத்தை நினைத்து நினைத்து கண்ணீர் விட்டேனே அந்த அழகுச் சோலையை என் அகத்தி

லிருந்து அகற்றி விடும்படி சொல்கிறீர்கள். எவருடைய அன்பிற்காக என் உள்ளம் ஏங்கிற்றோ அந்த அன்பு தெய்வமே மறந்து விடும்படி வரமளித்துவிட்டது. இனி நான் யாருக்காக வாழவேண்டும். என் வாழ்வு நிலவில்லா வானத்தைப் போல் ஆகிவிடவேண்டியதுதானு அன்பரே. என் வாழ்க்கைப் பூங்காவனம் வெறும்பாலைவனமாக வேண்டியதுதானு. நான் கண்ட கனவுகள், எண்ணிய எண்ணங்கள், கட்டிய மனக்கோட்டைகள் எல்லாம் வீணுக வேண்டியது தானு கண்ணு! சொல்லுங்கள் அன்பரே! சொல்லுங்கள்.''

ஏதோ ஆபீஸ் விஷயமாக ஞானத்திடம் பேசவந்த பாலசுந்தரம், சாந்தாவும் ஞானமும் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டு அப்படியே மறைவாக நின்று விட்டார். இவர்கள் பேசியதை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்த பால சுந்தரம் 'நான் பதில் சொல்லுகிறேன்' என்று சொல்லி உள்ளே சென்ருர். பால சுந்தரம் வந்து விட்டதைப் பார்த்த ஞானத்திற்கு இன்னது செய்வதென்றறியாமல் 'சார் நான் நிரபராதி. குற்றமற்றவன்' என்ருன். ''துரோகி, நயவஞ்சகன் நச்சுப்பாம்பே, கேடு கெட்டவனே, என் குலத்தைக் கெடுக்க வந்த கயவனே என்று சொல்வேன், என்றுநினைக்காதே. ஆனல், உங்களிருவருக்கும் சரியான தண்டனை கொடுக்கப் போகிறேன். இன்றிலிருந்து நீங்களிருவரும் என் மனச்சிறையிலே ஆயுள் கைதிகளாக இருக்க உங்களிருவரையும் தண்டிக்கிறேன்'' என்ருர்.

சாந்தா, 'அப்பா!' என்று ஆசையுடன் அவரை அணைத்துக் கொண்டாள். பால சுந்தரம் ஞானத்தைப் பார்த்து, ''ஞானம்! உன் நல்ல குணத்திற்கும் நேர்மையான நடத்தைக்கும், தூயமான உள்ளத்திற்கும் நான் பெரிதும் மகிழ்கிறேன். அதற்குப் பரிசாக என் மாணிக்கத்தை உன் மனைவியாக ஏற்றுக்கொண்டு மங்களமுடன் வாழ வேண்டும். கூடிய சீக்கிரத்தில் என் தங்கத்தை உனக்குத் தாரமாக ஆக்க நாள் பார்க்க போகிறேன். சம்மதம் தானே?'' என்ருர். ஒன்றும் சொல்லாமல் தலைகுனிந்து கொண்டிருந்தான். 'சரி நான் வருகிறேன்' என்று சொல்லி போய்விட்டார்.

ஞானம் சாந்தாவின் அருகே சென்று அவளை ஆசையுடன் தழுவி அணைத்துக் கொண்டான்.

'மறக்க மாட்டீர்களே யத்தான்?' 'தேனை வண்டு மறக்குமா என்தமிழ் இன்பமே. கரும்பை எறும்பு மறக்குமா கண்ணே. மலரின் மணத்தை யாராவது மறப்பார்களா என் மனேன்மணி. உயிர் உடலை மறக்குமா என் ஊர்வசி'

'வெறும் பேச்சல்லவே வேந்தே?' 'இல்லை. கண்ணே பாசத்தால் உதிரும் உண்மைபேச்சு என் பச்சைக்கிளியே. எவ்வளவு சீக்கிரத்தில் உன் அன்புக் கச்சையால் என்னைக் கட்டிவிட்டாய் என் அன்பில் விளைந்த அமுதமே'.

'இவ்வளவு நேரம் என்னை எவ்வளவு கஷ்டப்படுத்தினீர்கள் கண்ணு.'

'கலங்கித் தான் போயிருப்பாய் கண்மணி. நீ கிள்ளை. நான் அதைத் தாங்கும் கிளை' என்ருன்.

'இந்த இன்பமே சொந்தமானல் வானுலகத்திலுள்ள சொர்க்கமும் வேண்டாம்மத்தான்'.

'அவ்வளவு தூரம் ஏன் கண்ணே போகிருய். சொர்க்கத்தை இங்கேயே நான் காண்கிறேன்.' 'எங்கேயத்தான்?'

'உன் செந்தாமரை மலர் முகத்திலே, நீலநிறக் கண்களிலே, வேல்விழிகளிலே, பவள உதட்டிலே, முத்துப் பற்களிலே, குறும்புப் பேச்சிலே குயிலினு மினியக் குரலிலே, தேன் சொட்டும் சுவையுள்ள சொற்களிலே அன்புப் பார்வையிலே, அகத்தின் அழகிலே உள்ளத்தின் உற்சாகத்திலே காண்கிறேன் சொர்க்கத்தை என் கலாபமயிலே'

'இப்படி எல்லாம் பேச எங்கேயத்தான் கற்றுக் கொண்டீர்கள்?'

'உன் சேல்விழிகள் கற்றுக்கொடுத்த பாடம் என் சிந்தைக்கினியவளே! உன் புன்சிரிப்பு போதித்த பாடம் என் பூலோக ரம்பையே. உன்னைக் கண்டால் கல்லாதவரும் கவி பாடுவார்களே கனிரசமே' என்ருன்.

அந்த இரவு இன்பசிரிப்புகளால் கழிந்தது. காதலிருவரும் கருத்தொருமித்து, தந்தையின் அநுமதியும் கிடைத்தால் கேட்க வேண்டுமா. மாப்பிள்ளைக் கோலத்தில் ஞானமும் மணப்பெண் கோலத்தில் சாந்தாவும் கலியாண மண்டபத்தில் இருவரும் களிப்புடன் சந்தித்தார்கள்.

---


புதிய இரண்டாம் பதிப்பு

## நபி நாயத்தின் ஜீவிய சரித்திரம்.

(சீறுவசனம்)

இச்சரிதை நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அவ்தரித்தது முதல், வபாத்து வரையில் நிகழ்ந்துள்ள விஷயங்கள் யாவும் ஒன்று சேர்த்து அச்சிடப்பட்டது. இது டிம்மி 1-8 பேஜ் சைஸில் 1008-பக்கங்களில் பதிப்பித்து இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டது. விலை ரூ. 8

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ், 5.

# இஸ்லாமிய சரித்திரச் சாரம்.

## ஹிஜ்ரீ 51-லிருந்து 100-வரை

(டி. எப். ஆர். மஆலி ஸாஹிப்-பாகவி)

### ஹிஜ்ரி-51:

(1) இவ்வாண்டு ரபீவுல் அவ்வல் மீ 1-ந் தேதி, நாயகத் திருமனையாட்டியாகிய உம்முல் மூமினீன் ஹஜ்ரத் மைமூனு (ரலி) அவர்கள் மரித்து மறைந்தார்கள்.

(2) இக்காலிலேயே, கஸ்துன்தனியா (என்னும் துருக்கிய கான்ஸ்டாண்டிநோபிள்) நகரத்தில், ஜிஹாது என்னும் மதப்போரை முன்னிட்டுப் போயிருந்த ஹஜ்ரத் அபூஅய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள், அங்கேயே இறந்து போய் விட்டார்கள்.

(3) பத்து உத்தமர்கள் எனப்படும் அஷ்ரயே முபஷ்ஷராவில் ஒருவராகிய ஸயீது பின் ஜைது (ரலி) அவர்கள், தம் 70-ம் வயதில் இறந்து போய், ஜன்னத்துல் பகீ என்னும் உத்தியானவனத்தில் கல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

(4) நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள் தம் புனித ஜீவிய காலத்தில், 'தாயிப்' என்னும் ஊருக்குத் தலைவராக (ஹாக்கிமாக) நியமனம் பெற்றிருந்த உதுமான் பின் அபில் ஆஸ் (ரலி) அவர்கள், இவ்வாண்டிலேயே இறந்து போனார்கள்.

### ஹிஜ்ரி-52:

(1) ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களது கிலாபத் ஆட்சி காலத்தில் பஸ்ராவின் பிரதிநிதியாக (கவர்னராக) இருந்த வரும் 'ஆஹ்வாஸ்' என்ற பிரதேசத்தை இஸ்லாத்தின் பெயரால் பிடித்து வெற்றி கொண்டவருமான ஹஜ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள், இவ்வாண்டு இறந்து போய் விட்டார்கள்.

(2) பெருமை வாய்ந்த ஸஹாபி (நபித் தோழர்)களில் ஒருவரான இம்ரான் இப்னு ஹஸியின் (ரலி) அவர்கள் இவ்வாண்டே இறந்து போனார்கள்.

### ஹிஜ்ரி-53:

(1) முதல் கலீபா ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களுடைய புத்திரர்களில் பெரியவரான அபிதுர் றஹ்மான் பின் அபூபக்கர் அவர்கள் இவ்வாண்டே இறந்து போனார்கள்.

(2) நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், தம் காலத்தில், நஜ்ரான் பிரதேசத்துக்கு அதிகாரியாக நியமித்தி

ருந்த அம்ரு பின் ஹஜம் (ரலி) அவர்கள், மதீனு முனவ்வராவில் இவ்வாண்டு இறந்து போனுர்கள்.

(3) நபிகள் நாயகத்துடைய மெய்க்காப்பாளரில் ஒருவராக வும் சிறந்த குதிரை வீரராகவும் இருந்த அபூகத்தாதா (ரலி) அவர்கள், தம் 70-ம் வயதில் மதீனமா நகரில் இறந்து போனுர்கள்.

## ஹிஜ்ரி-54:

(1) இவ்வாண்டு ஷவ்வால் மாதம் 5-ம் தேதி, திருநபியின் நாயகி உம்முல் மூமினீன் ஹஜ்ரத் ஸவ்தா (ரலி) அவர்கள், தம் 62-ம் வயதில் இறந்து போனுர்கள்; ஜன்னத்துல் பகீயில் நல்லடக் கம் ஆனுர்கள்.

(2) நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய காதிம் (சேவகர்)களில் முக்கியஸ்தரான ஹஜ்ரத் ஜைது (ரலி) யுடைய புதல்வரான ஹஜ்ரத் உஸாமா பின் ஜைத் அவர்கள், இவ் வாண்டே இறந்து போனுர்கள்.

(3) திரு நபி நாயகி ஹஜ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் அண் ணன் புத்திரரான ஹக்கீம் பின் ஹிஸாம் அவர்கள், தமது 120-ம் வயதில், மதீனு நகரின்கண் இறந்து போனுர்கள்.

## ஹிஜ்ரி-55:

(1) அஷ்ரயே முபஷ்ஷரா என்னும் பத்து உத்தமர்களில் ஒருவரான ஹஜ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள், தம் 70-ம் வயதில் இறந்து போனுர்கள்.

(2) கஅப் இப்னு (ரலி) அவர்களும் இவ்வாண்டே, மதீனு நகரின்கண் இறந்து போனுர்கள். இப்பெரியார், இஸ்லாத்தில் சேர்ந்து முஸ்லிமாவதற்கு முன் பத்ரு யுத்தத்தில் அஜ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களை கைது செய்து கொண்டுபோய் விட்டவராவர்.

## ஹிஜ்ரி-56:

(1) இவ்வாண்டு ரபீஉல் அவ்வல் மாதம், உம்முல் மூமினீன் ஹஜ்ரத் ஜுவைரியா நாயகி (ரலி) அவர்கள், தம் 65-ம் வயதில் மதீனு முனவ்வரா நகரில் இறந்து போனுர்கள்.

(2) இவ்வாண்டு அப்துல்லாஹ் பின் குர்த் (ரலி) என்பார், ரோம் தேசத்தில், விரோதிகளால் கொல்லப்பட்டு போனுர்கள்.

(3) இவ்வாண்டு துல்ஹஜ்ஜு மாதம், அமீர் முஆவியா (ரலி) அவர்கள், ஹஜ்ஜு செய்ய ஹிஜாஸுக்கு வந்து, மக்கா வாசிகளையும் மதீனு வாசிகளையும் பல வகையில் நிர்ப்பந்தப்படுத்தி, தம்முடைய குமாரனுன யஜீதுக்கு அவனைவரும் 'பைஅத்து' (வாக்கு தத்தம்) செய்யும்படிச் செய்தார்.

## ஹிஜ்ரி-57:

(1) இவ்வாண்டு, ஸபர் மாதம் 20-ந் தேதி தான், அஹ்லெ பைத்தில் (நாயகக் குடும்பத்தினரில்) 5-வது இமாமாகிய ஹஜ்ரத் இமாம் முஹம்மது பாகிர் (ரலி) அவர்கள், மதீனா முனவ்வரா நகரில் பிறந்தார்கள்.

(2) இவ்வாண்டு ரமலான் மாதம் 17-ந் தேதி புதன்கிழமை யன்று, திருநபி நாயகி உம்முல் மூமினீன் ஹஜ்ரத் ஆயிஷா ஸித்தீகா (ரலி) அவர்கள், தமது 66-ம் வயதில் இறந்து போனார்கள். இவர்களது ஜனாஸா, மதீனாவின் பகீஃ வனத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## ஹிஜ்ரி-58:

(1) நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸஹாபாக்கள் என்னும் தோழர்களில் மிக முக்கியமானவரும், அபாரமான ஞாபக சக்தியுடைய வருமான ஹாபிஜுல் குர்ஆன், ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி)அவர்கள், தமது 75-ம் வயதில் இறந்து போனார்கள்.

## ஹிஜ்ரி-59:

(1) இவ்வாண்டு ரஜப் மாதம் 20-ந் தேதி யன்று, திருநபி நாயகி உம்முல் மூமினீன் ஹஜ்ரத் உம்முஸல்மா (ரலி) அவர்கள், தம் 84-ம் வயதில் இறந்து போனார்கள்; ஜனாஸா பகீஃ வனத்தில் நல் அடக்கம் செய்யப்பட்டது.

(2) கலீபா ஹஜ்ரத் உதுமான் (ரலி) அவர்களின் தாய் மாமனுடைய புத்திரரும் குராஸான், பஸ்ரா ஆகிய நகர்களின் இஸ்லாமிய அதிகாரியுமான அப்துல்லாஹ் பின் ஸஅத் (ரலி) அவர்கள், இவ்வாண்டே இறந்து போனார்கள்.

(3) ஹஜ்ரத் உதுமான் (ரலி) அவர்களுடைய கிலாபத் ஆட்சி காலத்தில், மிஸ்ர் (எகிப்து) நாட்டுப் பிரதிநிதியாக (கவர்னராக) இருந்த ஸயீது இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் இவ்வாண்டே இறந்து போனார்கள்.

## ஹிஜ்ரி-60:

(1) இவ்வாண்டு ரஜப் மாதம் தான், சரித்திர பிரசித்தி பெற்ற அமீர் முஆவியா (ரலி) அவர்கள் தம் 77-ம் வயதில் இறந்து போனார்கள். தந்தை இறந்ததும் தனயன் யஜீது என்பான், சுயமே கிலாபத் பதவியில் அமர்ந்து கொண்டான்.

(2) இவ்வாண்டு, (பிற்காலத்தில்) பனிஉமய்யா வம்சத்தின் ஏழாவது கலீபாவாகத் தோன்றிய ஸுலைமான் இப்னு அப்துல் மலிக் என்பார் பிறந்தார். இவர் பிற்காலத்தில் ஹிஜ்ரி 96-ல் கிலாபத் பதவியில் அமர்ந்தார்.

ஹிஜ்ரி-61:

(1) இவ்வாண்டு முஹர்ரம் மாதம் பிறை 10ந் தேதி வெள்ளிக் கிழமையன்று, ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள், இஸ்லாமிய குடியரசாக்ஷிக்காக வென்று, இஸ்லாத்தின் பெயரால், அயோக்ய அதிபதி யஜீது (பின் முஆவியா) உடைய அதிக்கிரம ஆட்சியை எதிர்த்து, கர்பலா மைதானத்தில் முற்றுகையிடப்பட்டு பல கொடுமைகளுக்கு உள்ளாகி கொல்லப்பட்டு 'ஸையிதுஷ்ஷுஹதா' (மகாதியாகி) என்னும் பதவி பெற்றார்கள்.

(2) இவ்வாண்டு நீதிஅதிபதி ஹஜ்ரத் உமர் பின் அப்துல் அஜீஸ் (ரஹ்) பிறந்தார்கள். இப்பெரியாரே ஹிஜ்ரீ 99-ல் பனி உமய்யா வம்சத்து 8-வது கலீபாவாக இருந்து சேர்மையாக ஆட்சி நடத்தியவர்.

ஹிஜ்ரி-62:

இவ்வாண்டு, அயோக்கிய சிகாமணியான யஜீது, புனித மதீனா முனவ்வரா நகரத்தின் மீது படையெடுத்துச் சென்றான். அங்குள்ள பிரஜைகளையும் அதிகாரிகளையும் தாக்கி அவர்களை தோற்கடித்தான். படுகொலைகளும் புரிந்து புனிதஸ்தலத்தில் இரத்தம் சிந்தினான். மதீனா வாசிகளில் பல உத்தமர்கள் அவனது கொடிய வாளாயுதத்துக்குப் பலியாகி, ஷஹீது பதவியடைந்தனர். இஸ்லாமிய சரித்திரத்தில் இரத்தக்கறை படிந்துபோன கர்பலா படுகொலை சம்பவத்துக்குப் பின், இந்த மதீனாநகர் படுகொலைச் சம்பவமும் குறிப்பிடத்தக்கதாகும். இங்கு யஜீது பல அழிச்சாட்டியங்களைப் புரிந்தான்

(2) மிகப்பெரும் சஹாபிகளில் ஒருவராகிய ஹஜ்ரத் அப்துல் முத்தலிப் பின் ரபீஆ(ரலி)தமிஷ்கு நகரத்தில் இறந்து போனார்கள்.

ஹிஜ்ரி-63:

கொடியோன் எஜீது, இவ்வாண்டு ஹஜ்ரத் அப்துல்லா பின் ஜுபைர்(ரலி)அவர்களை எதிர்த்துத் தாக்கிப் போரிட்டதோடு, மகாப் புனித மக்கா நகர் மீதும் படையெடுத்துச் சென்றான். அப்புனித நகர் மீது விசைக் கவண் மூலம் கல்மாரியும் பொழிந்தான். இதனால் பரிசுத்த கஃபத்துல்லாஹ் உடைய கட்டிடங்களுக்கு சேதமும் ஏற்பட்டது.

(2) அஹ்லெ ஸுப்பாக்களில் ஒருவரும் நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்களின் அத்தியந்த ஊழியர்களில் ஒருவருமான ஹஜரத் ரபீஆ பின் கஅப் (ரலி) அவர்கள், இவ்வாண்டே இறந்துபோனார்கள்.

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

18754

## மிபுத்தாஹுஸ்ஸலாஹ் பீ யீலாஹின்னிகாஹ்

(இப்புத்தகம் இல்லற வாசிகள் ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டியது)

இதில் நிக்காஹுடைய வரிசைகளும், அஹ்காம்களும், ஸ்திரீ புருஷருடைய குணலக்ஷணங்களும், ஒவ்வொருவரும் இன்ன குணமுடையவர்களென்று பார்த்த மாத்திரத்தில் கண்டறியக்கூடிய வழியும், ஸ்திரீ, புருஷர்கள் அவசியம் அறியவேண்டிய அநேக ரகசியங்களும், ஒரு புருஷன் விரும்பிய மனைவியையும், ஒரு ஸ்திரீ விரும்பிய கணவனையும் அடைவதற்கு வேண்டிய இஸ்முகளும் அடங்கியிருக்கின்றன.

இவையன்றி ஸ்திரீ புருஷருக்கிடையில் முஹப்பத் உண்டாவதற்கும் ஹமல் உண்டாவதற்கும், ஹமலைக் காப்பதற்கும் அவசியமான இஸ்முகளும், ஹமலில் உண்டாகக் கூடிய பலவகை வியாதிகளுக்கு அரிய ஔஷதங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

முன் பதிப்பிலிருந்ததைவிட இப்பதிப்பில் அநேக அரிய விஷயங்களும் இஸ்முகளும் சேர்க்கப் பட்டிருக்கின்றன. வாசிப்போர்க்கே இந்நூலின் அருமை விளங்கும்.
புதிய பதிப்பு கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு விலை ரூ. 3

புதிய மூன்றாம் பதிப்பு

## ஹஸ்ரத் நாகூர் மீரான் ஸாஹிபு ஆண்டவர்களின் காரண சரித்திரம்

இது ஹஸரத் ஸையிது அப்துல் காதிர் ஷாஹுல் ஹமீது மீரான் ஸாஹிபு ஆண்டவர்களின் ஜீவியமும், அவர்களின் அற்புதமாகிய கராமத்துகளும் ஒருங்கே நிறைந்தது. இது நேர்த்தியான காகிதத்தில் அச்சிடப்பட்டு அழகான பைண்டு செய்யப்பட்டது விலை ரூ. 2—4—0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.

அரை விலை! அரை விலை!!

# மனயிஹுல் அன்வார் பீ மதாயிஹுர் ரஸுலில் அப்ரார்.

இந்த கிதாபில், நமது நாட்டில் வழமையாய் ஓதி வருகிற ஸுபுஹான மௌலிது, பர்ஸஞ்சி மௌலிது, ஹஸன் (ரலி) ஹுஸைன் (ரலி) மௌலிது, முஹியித்தீன் (ரலி) மௌலிது, ஷாஹுல் ஹமீது (ரலி) மௌலிது ஆக ஐந்து மௌலிதுகளும், யாஸைய்யிதி, யாகுத்பா, யாஸைய்யிதி ஷைகி, ஷபீஹுக பைத்து, கலாஸீ பைத்து, மழை பைத்து, பீஹுப்பி (ஸலவாத்து) பைத்து, கஸீதத்து ஹுஸைனிய்யா, அயாரப்பி பைத்து, ஜுத்பிலுத்பிக முனாஜாத்து, ஜிந்தா ஷாஹ் மதாரிய்யா பைத்து, அபுல் ஹஸனிஷ் ஷாதிலீ (றழி) குத்பிய்யா, காஜா முயீனுத்தீன் (ரலி) பர்திய்யா, யாமன்யரா பைத்து, கல்வத்து நாயகம் பேரில் கஸீதா முதலியவையும் அடங்கியுள்ளன. இது பெரிய எழுத்தில் எழுதி, போட்டோ பிளாக் செய்து, கிளேஸ் காகிதத்தில் சுத்தமாய் அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

விலை ரூ. 6—0—0

ஷை கிதாபு ஒரே நேரத்தில் 6 வாங்கினால் அரை விலையாக கொடுக்கப்படும். அதாவது ரூபா. 18–0–0க்கு 6 கிதாபுகள் கொடுக்கப்படும். இந்த சலுகை சொர்ப்ப காலத்திற்கே இருக்கும். இந்த சலுகை எவ்வித முன் அறிவிப்பும் இல்லாமல் நிறுத்தப்படக்கூடும்.

---

இந்த கிதாபு கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.